உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24 ] விசுவாவசு - ஆடி - 10—8—65 [ இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## கயிலாயக் காட்சி

மண்ணுலகில் உள்ளோர் தன்னை நினைந்து வழிபடுதற் பொருட்டும், அவ்வழிபாட்டினை ஏற்று அவர்கட்குப் போக மோட்சங்களை அருளுதற் பொருட்டும் சிவபெருமான் உண்மைத் திருமேனியுடன் எழுந்தருளியிருக்கும் இடம் திருக்கயிலையாகும். அதனாலே, சரியையாதி தவங்களைச் செய்த பெரியோர்க்குச் சாலோகாதி தூய இன்பங்களையும், ஞானத்தையும் அளித்தற்பொருட்டு அவன், அங்ஙனம் எழுந்தருளியிருக்கின்ற சிவலோகமும், 'மகாகயிலாயம்' எனப்படுகின்றது.

திருக்கயிலை இம்மண்ணுலகிலே உள்ளதாயினும், அஃது ஏனைய இடங்கள்போல, எளிதில் சென்று அடையக் கூடியது அன்று; இதனைச் சிவபெருமானே ஒருமுனிவர் வடிவில் வந்து,

" கயிலை மால்வரை யாவது காசினி மருங்கு
பயிலு மானுடப் பான்மையோர் அடைவதற்கெளிதோ"

என்று திருநாவுக்கரசர்க்குக் கூறியதாகச் சேக்கிழார் அருளு மாற்றால் அறியலாம். இங்ஙனம் திருக்கயிலை எளிதில் அணுகவொண்ணாததாய் இருத்தல்பற்றியே அதன் நினைவாக அளவற்ற சிவாலயங்கள் இந்நிலவுலகில் அமைவவாயின.

சில சில இடங்களில், 'கயிலாயம்' என்னும் பெய ரோடே சிவன் கோயில்கள் அமைந்திருத்தல் கண்கூடு. சிலப்பதிகாரத்தில், காவிரிப்பூம்பட்டினத்தில் அக்காலத்தில் அமைந்திருந்த கோயில்களை எல்லாம், 'கோட்டம்' என்று எடுத்துக்கூறி வருமிடத்து, 'ஊர்க்கோட்டம்' என்று ஒன்று சொல்லப்படுகின்றது. அதற்கு, 'சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் கயிலாயக் கோட்டம்' என்று உரை கூறு கிறார்கள். அரும்பத உரையாசிரியரும், அடியார்க்கு நல் லாரும். அதனால், சிவபெருமான் கோயில், 'ஊர்க்கோட்டம்' என்றும், கயிலாயக் கோட்டம்' என்றும் வழங்கும் வழக்கம் அக்காலத்து இருந்தது என்பது புலனாகும். திருக்கயிலை யிலும், அதன் பிரதியாய் அமைந்த சிவாலயங்களிலும் எல்லாத் தேவர்கட்கும் ஒவ்வோர் இடம் இருத்தலால், அது தேவர் பலரும்கூடி வாழும் ஊராயிற்றுப்போலும்! சிவாலயங் களும், சிவவழிபாடும் மிகுந்துள்ள தென்னாட்டில், 'ஆன் மார்த்தம், பரார்த்தம்' என்னும் இருவகை வழிபாடுகளையும் - ஏன்? அனுட்டானம் முதலிய எந்த நற்செயல்களையும் - பெரும்பாலும் வடக்குநோக்கியே செய்தல், இறைவன் எழுந் தருளியுள்ள திருக்கயிலை இடத்தை முன்னிட்டேயாகும்.

நிலவுலகில் உள்ள கோயில்கள்யாவும் திருக்கயிலையை முதலாகக் கொண்டே விளங்குகின்றன என்பதை, ஓர் அழகிய முறையில் சேக்கிழார் அருளியுள்ளார்:

" நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண் தளி ராக எழுந்ததோர்
உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை "

'இவ்வுலகத்தை ஒரு கொடியாகக் கொண்டால், இதில் உள்ள தலங்கள் பலவும் தளிர்கள் ஆகும்' என்றும், 'அத்தளிர்களின் மேல் மலர்ந்துள்ள ஒரு வெண்ணிற மலரே கயிலாய மலை' என்றும் இப்பாடலால் அவர் குறிக்கின்றார்.

கொடியில் முதலில் உண்டாகும் பயன் பூ. பின்பு காய் தோன்றக் கனி கிடைக்கும். ஏனைய தலங்களிலிருந்து வழிபாடுகள் செய்தால், கயிலையை அடையலாம். பின்பு, சிவபிரானை நேரே தரிசித்துப் பேரின்பம் எய்தலாம். ஆகவே கயிலாயத்தையே குறியாகக்கொண்டு மற்றைய தலங்கள் விளங்குகின்றன என்றல் கருத்தாயிற்று. கயிலை மலை வெள்ளியாய் இருத்தலைப் புகழ்ந்து கூறும் முறையில் இங்ஙனம் கூறுவார்போலத் தோன்றினாலும், உண்மைக் கருத்து, ஏனைய தலங்கள் பலவும் திருக்கயிலையையே தம் சிரமேல் தாங்கி விளங்குகின்றன எனக் கூறுதலேயாகும் என்பது இதனுள் நன்கு விளங்குகின்றது.

சிவபிரான் உண்மைத் திருமேனியுடன் விளங்கி வீற்றிருப்பதால், இதன் பெருமை சொல்லுதற்கரிது. இதன் எப்பக்கத்திலும் முனிவர்கள் ஓதுகின்ற வேதங்களின் ஒலியும், கந்தருவர்களது வீணாகானமும், தேவ துந்துபிகளின் முழக்கமும் உள்ளனவாம். மால், அயன் இந்திரன் முதலிய தேவர்கள் ஒருபக்கம் வரிசை வரிசையாகத் தலைமேல் கைகளைக் குவித்து நிற்பதும், முனிவர்கள் அவ்வாறு ஒரு பக்கம் நிற்பதும் அங்குக் காணப்படுமாம். உலகத்தையே தம் விருப்பப்படி எடுத்து விளையாடக் கூடிய ஆற்றல் வாய்ந்த பூத கணங்கள் அளவின்றி அங்கு உலாவுகின்றனவாம். இவ்வாறெல்லாம் சேக்கிழார் கயிலாயக் காட்சியை வகுத்து வகுத்துக் கூறுகின்றார்.

வெள்ளிமலையாகிய திருக்கயிலாய மலையை அடைந்து, அதன் சிகரத்திலே சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருக் கோயிலில் சென்றால், முதலில், மற்றொரு வெள்ளி மலை போலத் தோன்றுகின்ற இடபம் நிற்குமாம்; அந்த இடபத் திற்கு அப்பால், அதற்கும் இறைவனுக்கும் இடையே நந்தி பெருமான் உலாவி, இறைவனை வணங்க வருவோரை வரிசைப்படுத்தும் பணியினைச் செய்துகொண்டிருப்பாராம்; அவ்வரிசையிற் கலந்து நின்று நோக்கினால், மரகத மலை ஒன்றை இடப்பக்கத்திலே கொண்டு, பவளமலை ஒன்று விளங்குதல்போல, உமாதேவியாரை இடப்பக்கத்திலே கொண்டு, சிவபெருமான் வீற்றிருந்தருளுவாராம். இக் காட்சிகளையெல்லாம் இவ்வாறே திருநாவுக்கரசர் திருவை யாற்றில் கண்டு பேரானந்தம் உற்றார் என்று, சேக்கிழார் அருளிச்செய்கின்றார்.

மக்களாய்ப் பிறந்தோர் அம்மக்களுடம்போடே கயிலை யை அடைதல் இயல்வதன்றாயினும், இருபெருமக்கள் அவ் வாறு அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் நம்பியரூரரும், சேரமான் பெருமாளுமே என்பது வெளிப் படை. இதனை,

"களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறு வெள்ளானை மேல்கொள்ள"

எனத் திருவிசைப்பாக் குறிப்பிடுகின்றது.

இவர்களுள் சேரமான்பெருமாள் நாயனார் தமது குதிரை மேலே முன்பு சேவித்துச் செல்ல, நம்பியாரூர் இறைவன் அனுப்பிய வெள்ளானைமீது ஏறிச்சென்றார்; செல்லும் பொழுது அவர்கண்ட காட்சிகளும் பல.

கயிலைமலை, பல பக்க மலைகளால் சூழப்பெற்றது. அம்மலைகளுக்கிடையே நம்பியாரூரர், தேவகணங்களும், சிவகணங்களும் புடைசூழ்ந்துவர, வெள்ளானைமீது ஏறிச் சென்றார். அவர்களது செலவினால், மண்ணும் விண்ணும்

அதிர்ந்தன; யாவரும் அரகர முழக்கம் செய்தனர்; சிலர் வேதங்களை எடுத்தோதினர்; சிலர் ஆகமங்களால் துதித்தனர்; சிலர் மற்றும் பல தோத்திரங்களைப் பாடினர். அப்பொழுது வருணன், ஆளுடைய நம்பிகளின் முன்னே வந்து மலர் தூவி வணங்கினான்; 'வாணன்' என்னும் சிவகணத்தவன் முன்னே வழிகாட்டிச் சென்றான்; இந்திரன், திருமால், பிரமன் முதலிய தேவர்கள் பலரும் எதிர்வந்து வரவேற்று நின்றார்கள்.

சிவபெருமானையே நோக்கித் தவஞ்செய்துகொண்டிருந்த முனிவர்கள், 'எத்தகையோரும் திருக்கயிலையை அடையுமிடத்து, ஆரவாரமின்றி அடக்கத்துடன் வருவது வழக்கமாய் இருக்க, இவ்வளவு ஆரவாரத்துடன் இங்கு வருகின்றவர் யார்' என்று திகைத்து, சிவபிரானைக் கேட்க, அவர் 'வருபவன் நம் தோழன் நம்பியாரூரன்' என்று திருவாய் மலர்ந்தருளினார். அதனைக்கேட்ட முனிவர்கள் வியப்புற்று, அவரை வணங்கினார்கள். இவைகளையெல்லாம் சுந்தரமூர்த்தி நாயனார் தமது இறுதித் திருப்பதிகத்தில் நன்கு எடுத்து அருளிச் செய்திருத்தலைக் காணும்பொழுது, அதிசயமும் அன்பும் தோன்றாமல் இரா. மேலும் அவர் அத்திருப்பதிகத்தில்,

"மண்ணுலகிற் பிறந்து நும்மை
வாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்ட
னேன் இன்று கண்டொழிந்தேன்"

என அருளிச்செய்தமை, அடியார்களுக்குச் சிவவழிபாட்டில் உள்ள உறுதியை மேலும் நன்கு வலியுறுத்துகின்றது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கயிலைக் காட்சியைத் தமது ஞானக்கண்ணாற்கண்டு, இரண்டு திருப்பதிகங்களில் அருளிச்செய்துள்ளார். அவற்றுள், தேவர்கூட்டமும் மக்கட்கூட்டத்துடன் ஒன்றாய்ச் சென்று வணங்குகின்ற காட்சியை அருளியிருத்தல், குறிப்பிடத்தக்கது.

இத்தகைய கயிலாயக்காட்சியை அப்பர், தாம் எடுத்த உடம்போடே சென்றுகாணத் தம்மால் இயலும் எல்லை அளவும் முயன்ருர்; ஆயினும், அவரால், மேலும் ஆக வேண்டிய செயலைக் குறித்து இறைவன் அவருக்கு அக் காட்சியைத் தென்ஞட்டில் உள்ள திருவையாற்றிலே காட்டி யருளினுன். இத்திருக்கயிலையை இந்நாளில், தருமை யாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எத்தகைய இன்னல்களையும் பொருட்படுத்தாது, கடினமான தொரு யாத்திரையை மேற்கொண்டு சென்று நேரிற்கண்டு வணங்கி மகிழ்ந்தமை, வியந்து போற்றுதற்குரியது. தருமை யாதீனம் திருக்கயிலாய பரம்பரை என்னும் பழமையை இம்மகாசந்நிதானமவர்கள் மீளவும் புதுக்கிக் கயிலைக் குருமணியாய் விளங்குகின்ருர்கள்.

இவர்கள், அப்பர் பெருமான் திருவையாற்றில் கயிலை யைக் கண்ட ஆடி அமாவாசைத் தினத்திலே தாங்களும் கயிலையைத் தரிசித்த இயைபு, மேலும் மகிழ்ச்சிக்கு உரிய தாகின்றது. கயிலைக் குருமணியவர்கள் கயிலாய தரிசனம் செய்த சிறப்புத் திருநாள், ஆறு ஆண்டுகளாகத் தருமை யில் பெருவிழா நாளாக விளங்கி வருகின்றது. அதனேடு சுந்தரர் வெள்ளானைமீது கயிலை சென்ற சுவாதிநாள் விழா வும் கூட, ஆடித்திங்களில் இருபெரு விழாநாட்கள், தருமையம்பதியில் அருட்செல்வத்தை அள்ளி வழங்கும் விழாக்களாய் உள்ளன. அவைகளை மிக அண்மையில் நேரிற்கண்டு களித்த அடியார்களைப் போலவே, ஏனை யோரும் தம் அகக்கண்ணுற்கண்டு, குருவருளுக்கும் திரு வருளுக்கும் உரியவராவார்களாக.

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய**

# அருளுரை

---

## அனுபூதி நிலை

உள்ளம் கரைய உடல்கரைய ஆனந்த
வெள்ளம் கரைபுரண்டு மேலாகக் - கள்ளமலம்
பொய்யாக என்னுட் புகுந்தவா றென்கொலோ
ஐயா தியாகவினோ தா.

ஈச னடியி லிருக்கையிலே எங்கெங்கும்
ஈசனடி தேடி இளைத்தேனே - பேசரிய
பொற்பதத்தன் செங்கமலப் பொற்பாதன் தன்னுடைய
நற்பதத்தைக் காணுமுன் நான்.

வாக்குமனக் காயத்தான் வந்தபொரு ளத்தனையும்
வாக்குமனக் காயமுடன் மாயுமே - வாக்குமனக்
காய முடனிழந்து காண்ஞா திருஞான
ஞேய மிழந்த நிலை.

புசிப்போம் சிவபோகம் ; பூரணமாய் எங்கும்
வசிப்போம் ; உலகில் வசியோம் ; - முசிப்பின்றி
வாழ்வோம் ; சிவத்தையுணர் மாதவர்தம் பொன்னடிக்
தாழ்வோம் எமக்கார் சரி. [கீழ்த்

மக்கள் பெறும் உறுதிப்பொருள், 'அறம், பொருள், இன்பம், வீடு' என நான்காயினும், 'வீடு' என்பது சொல்லாற் சொல்ல வாராது, அனுபவத்தால் உணரப்படுவதாகும். அதனால், 'கண்டவர் விண்டிலர் ; விண்டவர் கண்டிலர்' என்று ஒரு

பழமொழியும் வழங்குகின்றது. எனினும், சொல்ல வாராத அவ்வனுபவ நிலையைச் சொல்வதற்கு எழும் ஆசையை அனுபவ வாக்குக்களில் காண்கின்றோம்:

"எம்பிரான் எனக்கமுத மாவானும் தன்னடைந்தார்
தம்பிரா னுவானும்.........பிரம புரத்துறையும் வானவனே."

(திருமுறை 2-40-1.)

"தேனினும் இனியர்; பாலன நீற்றர்
திங்கரும் பனையர்; தம் திருவடி தொழுவார்
ஊன்நயந் துருக உவகைகள் தருவார்
......அச்சிறு பாக்கம தாட்சிகொண்டாரே."

(சம்பந்தர்.)

"தெள்ளத் தேறித் தெளிந்துதித் திப்பதோர்
உள்ளத் தேறல்; அமுத ஒளி; வெளி;
கள்ளத் தேன், கடி யேன், கவ லைக்கடல்
வெள்ளத் தேனுக்கெவ் வாறு விளைந்ததே. (அப்பர்.)

"பூவில் வாசத்தைப் பொன்னினை மணியைப்
புவியைக் காற்றினைப் புனலனல் வெளியைச்
சேவின் மேல்வருஞ் செல்வனைச் சிவனைத்
தேவ தேவனைத் தித்திக்குந் தேனைக்
காவியங் கண்ணி பங்கனைக் கங்கைச்
சடையனைக் காம ரத்திசை பாட
நாவில் ஊறும்நள் ளாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்நினைக் கேனே"

(சுந்தரர்.)

"அடியேற்கு
அருளியது அறியேன்! பருகியும் ஆரேன்!
விழுங்கியும் ஒல்லகில்லேன்!
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்! கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன்!"

(மாணிக்கவாசகர் - திருவண்.)

என்ருற்போல வருவன பலவும், அளவிலா ஆனந்தமாகிய வீட்டின்பத்தின் அனுபவ நிலையை ஒருவகையாக நாம் உணரும் வண்ணம் எழுந்த அருள்வாக்குக்களாகும். இத்தகைய அனுபவம் பக்குவம் உடைய பெருமக்கட்கு, அவர்கள் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியாகவே வாய்க்கின்றது. ஏனெனில், எல்லா உயிர்களும் இயல்பாக உலகியலிலேயே ஈடுபட்டுச் செல்வது போலவே, முற்பிறப்பிற் செய்த தவம் உடைய பெருமக்களும் உலகியலிற் சென்றுகொண்டிருக்கின்றனர். அப்பொழுது, முன்னைத் தவம் முதிர்ந்து, தனது பயனைக்கொடுக்கவருகின்றது; அதனுல் இடையிலே இப் பேரின்ப அனுபவம் அவர்கட்கு வாய்த்துவிடுகின்றது. அதுகண்டு அவர்கள் பெரிதும் வியப்படைகின்றனர். இஃது எப்படி நமக்கு வாய்த்தது? என்று திகைக்கவும் செய்கின்றனர்.

ஞானசம்பந்தரும் தமக்குக் குழந்தைப் பருவத்திலேயே, உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும் வாய்க்கப்பெற்றதை எண்ணி வியக்கின்ருர். அதனை,

"போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்"

"என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்துள்"

என்ருற்போன்ற பகுதிகளிற் காணலாம். நாவுக்கரசரும்,

"என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே"

என்று ஓரிடத்திலும்,

"எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே"

என்று வேருேரிடத்திலும், மற்றும் பலவாறும் வியந்தருளிச் செய்கின்ருர்.

"பொய்யவ னுயடியேன் புக வேநெறி
யொன்றறியேன்
செய்யவ னுகியேவந் திட ரானவை
தீர்த்தவனே"

"கடியேன் காதன்மையாற் கழற் போதறி
யாதஎன்னுள்
குடியாக் கோயில் கொண்ட குளிர்வார்சடை
யெங்குழகா"

"பொய்யே செய்து புறம்புறமே
திரிவேன் றன்னைப் போகாமே
மெய்யே வந்திங் கெனையாண்ட
மெய்யா மெய்யர் மெய்ப்பொருளே."

என்றாற்போலச் சுந்தரர் அருளிச்செய்வனவும் அத்தகையனவே யாம். சிறிதும் தகுதியில்லாத தமக்கு இறைவன் தனது பேரருளை வழங்கினுன் என்று வியந்தும், நயந்தும் எடுத்தோதும் பகுதிகள் திருவாசகத்தில் மிகப் பல.

இங்ஙனம் வியந்தும் நயந்தும் நிற்குமிடத்து, அவர்களது உள்ளமும் உடலும், அனலிடைப்பட்ட மெழுகுபோல உருகு கின்ற அன்புமீதூர்கின்றது; அவ்வன்பினுல், இன்பம் மேலும் மேலும் பெருகிப் பெருகி விளைகின்றது. அவ்வின்பவெள்ளத் தில் ஆழ்ந்து, அவர்கள் தம்மையே இழந்துவிடுகின்றூர்கள், தம்மையே இழந்துவிட்டபின்பு, அவர்களுக்கு உடைமையாய் இருப்பன வேறு யாவையுள! யாதும் இல்லை. அதனுல். அவர்கட்கு, அதற்குமுன் இருந்த நிலைகள் எல்லாம், கனவு போலவும், வெறுங்கற்பனை போலவும் தோன்றுகின்றன. இந்த நிலையை எங்கள் குருஞானசம்பந்தர் எடுத்தோதி வியந்தும், மகிழ்ந்தும் அருளிய பாடல்களில் சிலவே முதலிற் காட்டப் பட்டன.

எங்கள் ஆதிபரமாசாரியராகிய அவர்கட்கு இப்பேரின்ப அனுபவம் திருவாரூரிலே, ஞானப்ரகாச தேசிகர் வாயிலாகக் கிடைத்தது, ஞானப்ரகாச தேசிகராகிய தம் குருமூர்த்தி களைக் குருஞானசம்பந்தர் திருவாரூர்த் தியாகேசப்பெருமா னகவே நினைக்கின்றூர். அதனுல், அவரை, 'ஐயா! தியாக விநோதா!' என்று அழைக்கின்றூர்.

தியாகமாவது, கொடுத்தற்கு அரிய பொருளையும் பிறர்க்கு மனம் உவந்து கொடுத்தல். உயிரையும், உயிரினும் இனிய பொருளையும் கொடுத்தலும் இதில் அடங்கும். ததிசி முனிவரும்,

சிபிச்சக்கரவர்த்தியும் போன்றவர் தம் உயிரைக் கொடுத்தனர். கன்னன், உயிரினும் சிறந்த தன் புண்ணியத்தைக் கொடுத்தான். இத்தகைய கொடைகளே, 'தியாகம்' எனப்படும். இறைவன், தன் அடியார்களுக்குத் தனது உடைமைகளாகிய மூவுலகத்தையும் கொடுப்பதேயன்றித் தன்னையே அவர்கட்குத் தவருது கொடுக்கின்ருன்எனில், 'தியாகேசன்' என்னும் பெயர், அவனுக்கன்றி வேறு யார்க்கு உரித்தாகும்! இறைவனைவிடச் சிறந்த பொருள் வேறில்லாமையால், அவனுக்குத் தன்னினும் மேலான பொருளைத் தருதல் இல்லையாயிற்று.

இத்தியாகத்தை இறைவன் திருவுளம் மகிழ்ந்து செய்கின்ருன் என்பதை, 'விநோதம்' என்பதனுல் குறித்தார். இனி, தம்மை அடைந்த பக்குவிகளுக்கு ஞானதானத்தைச் செய்து மகிழ்தல் காரணமாக, ஞானப்ரகாச தேசிகரையே குருஞானசம்பந்தர், 'தியாக விநோதர்' என்று குறித்தார் என்பதும் பொருந்துவதேயாம்.

தம் ஆசிரியரை இங்ஙனம் விளித்து, "தேவரீர் இச்சிறியேனுடைய உள்ளத்தில் புகுதற்குக் காரணமாக அடியேன் செய்த தவம் யாது" என்று வினவுகின்ருர். தம் ஆசிரியர் தமது உள்ளத்தில் புகுந்தமையால் விளைந்த பயன்களை எல்லாம் முதலிலே விளக்கியருளினுர். 'தான் இருப்பது தெரியாமலே இருந்து தீமையை விளைவித்துக்கொண்டிருந்த ஆணவமலம், இப்பொழுது போனது தெரியாமலே போய்விட்டது; அதனுல், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பவற்ருல் பற்றப்பட்டுக் கல்லினும் வலிமையாய்க் கிடந்த உள்ளமும் உடலும், அவையெல்லாம அடியோடு ஒழிய, ஞானமும் அன்பும் பெற்று, உப்பினுற் செய்த பாவை, தன்மேல் மழை பெய்யப் பெற்ருற்போல, உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகியும், உடம்பெல்லாம் கண்ணுய் அன்புக்கண்ணீர் வெள்ளம் பாய்ந்தும் கரைந்து கரைந்து நெகிழ்கின்றன; அவ்வாறு அவை நெகிழுந்தோறும் நெகிழுந்தோறும் பேரானந்தம், பெருவெள்ளமாய்க் கரைபுரண்டு வந்து, என்னை யான் அறியாதவாறு ஆழ்த்தி, என்மேலே கோத்துக்கொண்டது; இதனை யான் என்னென்பேன்' என்று வியக்கின்ருர்.

இன்னும் அவர், வேருெரு பாடலில். 'மாயை என்றும், மலம் என்றும் சொல்லப்பட்டவைகளெல்லாம் இப்பொழுது எங்கே போயின! மாயையின் காரியமாகக் காணப்பட்டிருந்த உலகந்தான் எங்கே! அவ்வுலகத்தில் உடம்பைப் பற்றியிருந்த உயிருங்கூட இப்பொழுது காணப்படவில்லையே! எங்கும் சச்சிதானந்த வெள்ளமாயன்ருே காணப்படுகின்றது!' என்று அதிசயித்துக் கூறியுள்ளார்.

இவ்விடத்தில் அனுபூதிமான்களுக்கு மற்ருென்றும் தோன்றுவதைக் காணலாம். அஃதாவது, அதற்குமுன் தமக்கிருந்த அறியாமையின் நிலை. அதனை அறியும்பொழுது அவர்கட்கு ஒருவகை நாணமும் உண்டாகிறது. அந்த நிலையைத்தான் எங்கள் பரமாசாரிய மூர்த்திகள் மேற்காட்டிய இரண்டாவது வெண்பாவில் அருளிச் செய்திருக்கிருர்கள்.

'நான், இன்றுமட்டுமல்ல; அன்று முதல், என்றுமே இறைவன் திருவடி நிழலில்தான் இருந்திருக்கின்றேன்; ஆனல் அதையறியாமல், இறைவனது திருவடி எங்கே உள்ளது! எங்கே உள்ளது!! என்று எங்கெங்கும் தேடி அலைந்து, அதனைக் காணுமல் இளைத்து நொந்தேன். பின்பு அவனே என்னை அழைத்து இதோ எனது திருவடியென்று காட்டியபொழுது, அத்திருவடி எப்பொழுதுமே என்னுடனுய் இருப்பதை அறிந்தேன்' என்பதே அவ்வெண்பாவின் கருத்து.

இதனுல், இறைவன் திருவடியை ஆன்மா சென்று அடைவது என்பதோ, அல்லது, இறைவன் ஆன்மாவைத் தேடி வந்து அடைந்து தனது திருவடியிற் சேர்த்துக்கொள்ளுதல் என்பதோ இல்லை. என்றுமே இறைவனது திருவடி வியாபகத்தில் இருப்பதை ஆன்மா அறிவதுதான், அவன் திருவடியை அடைதலாகும் என்பது விளங்கும். இதனையே 'உண்மை விளக்கம்' என்னும் சாத்திரம்,

"சென்றிவன்ருன் ஒன்றிற் சிவபூ ரணம்சிதையும்;
அன்றவன்ருன் ஒன்றுமெனில் அன்னியமாம்; - இன்றிரண்டும்
அற்றநிலை ஏதென்னில், ஆதித்தன் அந்தன்வழிக்
குற்றமற நின்றதுபோற் கொள்"

என்று விளக்குகின்றது.

" தேடிக் கண்டுகொண்டேன்; - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணுத் தேவனை என்உள்ளே
தேடிக் கண்டுகொண்டேன் " (அப்பர்.)

" வானத்தான் என்பாரும் என்க;மற் றும்பர்கோன்
தானத்தான் என்பாருந் தாம்என்க - ஞானத்தான்
முன்நஞ்சத் தால்இருண்ட மெய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தான்என்பன் யான் "

(காரைக்காலம்மையார்)

என்டனபோன்ற திருவாக்குக்களும், இக்கருத்தைத் தெரிவிப்பன வேயாகும்.

உள்ளமும், உடலுமேயன்றி, உயிரும் தோன்ருது மறையும் ஆனந்த வெள்ள அனுபவ நிலையில், வாக்கு மனங்கட்கு இடம் எங்கே இருத்தல் கூடும்! கூடாது. ஏனெனில், அவ்வனுபவம், ஞாதுரு ஞான ஞேயங்கள் அற்றநிலையாகும். ஞாதுரு-அறிபவன; ஆன்மா, ஞானம் - அவனது அறிவு, ஞேயம் - அறியப்படும் பொருள்; சிவம். இவைமூன்றும் அறுதல் என்பது, அங்ஙனம் மூன்ருகப் பகுத்து அம்மூன்றனையும் அறிந்து நிற்கும் நிலையைக் கடந்து நிற்றலாம். எனவே, ஆன்மா, அறிபவனுகிய தன்னையும், அறிதற்கருவியாகிய தனது அறிவையும் காணுது, அறியப்படும் பொருளாகிய சிவம் ஒன்றையே கண்டுகொண்டிருத்தலே, சிவப் பேருகிய சிவானந்த அனுபவநிலை என்பது விளங்குகின்றது. இந்நிலையிலே நிற்க வேண்டும் என்பதைத் தான் மூன்ருவது பாடலில் எங்கள் குருமூர்த்திகள் தங்கள் மாணவர்களுக்கு உபதேசித்தருளுகிருர்கள்.

' வாக்கினுலும், மனத்தாலும் பற்றி உணரப்படும் பொருள்கள் எல்லாம், அந்த வாக்கும், மனமும் அழியும்பொழுது, தாமும் உடன் அழிந்துவிடும். ஆதலால் என்றும் அழியாத ஆனந்தப்பொருளை வாக்கினுலும். மனத்தினுலும் பற்றி உணர்தல் இயலாது. ஆகவே, ஞாதுரு ஞானஞேயங்கள் அற்ற அந்த அனுபவநிலையை, மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களினும் நீங்கி நின்று காண்க ' என்று அருளிச்செய்கின்ருர்கள்.

இத்தகைய சிவபோகத்தைத் துய்க்கப்பெற்றவர்களுக்கு, மண்ணுலகிலும், விண்ணுலகிலும், எவ்வுலகிலும் எவரும் ஈடாகார் என்பதே, " புசிப்போம் சிவபோகம் " என்ற வெண்பா வில் சொல்லப்படுகிறது.

" ஈசன் எந்தை இணையடி நிழலை அடைந்த நாங்கள், அங்கு, மாசில் வீணையும், மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கிள வேனிலும் போன்ற இனிய சிவபோகத்தையே எஞ்ஞான்றும் நுகர்ந்துகொண்டிருப்போம்; அதனால், அத்திருவடி நிழலில் எங்குமாய் இருப்பதன்றி, உலகத்தில் ஓரிடத்தில் மட்டும் இருப்போமல்லோம்; ஆகவே எங்கட்கு ஒருஞான்றும் கவலை என்பதே இல்லை. இவ்வாறே சிவபோகத்தை நுகர்ந்து சிவனடி நிழலில் வாழ்கின்ற சிவனடியார்களை அடிபணிவதன்றி, உலகத் தில் ஒருவரையும் நாங்கள் அடிபணியமாட்டோம். இப்பெரு நிலை, உலகபோகத்தை அனுபவிப்பவர்களில் யாருக்கு உண்டு ! " என்று அத்திருவெண்பாவில் அருளிச்செய்திருத்தல், ஞானிகளின் பெருமையை நாம் நன்குணரச் செய்கின்றது.

சிவபோகத்தை எய்திய சிவனடியார்கள், " நாம்ஆர்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்" "வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் " " யாமார்க்கும் குடியல்லோம்; யாதும் அஞ்சோம்" 'எங்கெழிலென் ஞாயி றெமக்கு" என்றெல்லாம் செம்மாந்தும், " இறுமாந்திருப்பன்கொலோ ஈசன் - பல்கணத் தெண்ணப்பட்டுச் - சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச்சென் றங் - கிறுமாந் திருப்பன்கொலோ" என்று அச்செம்மாப்பில் பெரு வேட்கையுற்றும் அருளிய அருள்மொழிகள் எல்லாம், "எமக்கார் சரி" என்ற எங்கள் குருஞானசம்பந்தரது திருவாக்கினால், நினைவிற்கு வருகின்றன. இத்தகைய இன்ப அனுபவ நிலையை எய்தும் தவம் யாவருக்கும் உண்டாவதாகுக.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 24, இதழ் 8, பக்கம் 447 இன் தொடர்ச்சி)

## 'சத்து, அசத்து' என்பவற்றின் விளக்கம்

ஆசிரியர்: இறைவன், 'பாசஞான பசுஞானங்களால் அறியப்படான்' என்பதையும், 'பதிஞானத்தால் அறியப்படுவான்' என்பதையும் ஐயமறத் தெளிந்தாயன்றே!

மாணாக்கன்: ஆம்; தெளிந்தேன்.

ஆசிரியர்: இனி, அவற்றால் அறிய வேண்டுவன சில உள; அவற்றைச் சொல்லுகின்றோம்; கேள்.

இறைவன் ஒருவாற்றானும் அறியப்படாதவனாகாது, பதிஞானத்தால் அறியப்படுதலின்; முயற் கோடு, ஆகாயத் தாமரை முதலியனபோல இல்லாத பொருளாகாது, உள்ள பொருளே யாகின்றான். உள்ள பொருளேயாயினும், ஏனைய பொருள்கள் போலப் பாசஞான பசுஞானங்களால் அறிய வாராமையின் அவ்வனைத்துப் பொருள்களின் தன்மையினும் வேறுபட்ட தன்மையுடையவனாகின்றான்.

ஏனைய பொருள்களாவன, பசுக்களும் பாசங்களுமாம். அவற்றுள், பசுக்கள் அறிவுடையன; ஆயினும், அவற்றின் அறிவுகள் பாசங்களால் மறைக்கப்பட்டிருத்தல் அனுபவமாய்க் காணப்படுவது, அதனால், அவ்வறிவுகள் 'சிற்றறிவு' எனப் படுகின்றன. பாசங்கள், அறிவே இல்லாத சடங்கள்; ஆகவே, இவற்றின் வேறுபட்ட தன்மை என்பது பேரறிவேயாம். எனவே, இறைவனது சிறப்பியல்பு அல்லது உண்மையியல்பு, பேரறிவுப் பொருளாய் நிற்றலாம். இதனை, "வாலறிவு" என்கின்றார். திருவள்ளுவ நாயனார். இப்பேரறிவே, 'சித்து' எனப் படுகின்றது.

தோற்றமும், அழிவும் சடப்பொருள்கட்கேயன்றிச் சித்துப் பொருட்கு இல்லை. 'அறிவு' என்னும் வகையைச் சேர்ந்த தாதலின், சிற்றறிவாய் நிற்கும் உயிருக்கும் தோற்ற அழிவுகள் இல்லையென்ருலும், தோன்றி அழியும் உடம்பின் வேருகத்தன்னை அறியமாட்டாமையால், உடம்பிற்கு வரும் தோற்ற அழிவுகளைத் தனக்கு வருவனவாக மயங்கிநின்று துன்புறுதல், உயிருக்கு உளதாகின்றது. இறைவன் சடமாதலும் இன்றி, சிற்றறிவாத லும் இன்றிப் பேரறிவாய் நிற்றலின், அவன் எவ்வாற்ருனும், தோற்ற அழிவுகள் இல்லாதவனுய் உள்ளான். தோற்ற அழிவு கள் இல்லாத தன்மையே, 'சத்து' என்று சொல்லப்படுகின்றது. 'தோற்றமாவது, புலனுதல்' என்றும், அழிவாவது, புலனுகாது மறைதல்' என்றும் சற்காரிய விளக்கத்தில் கூறியதை மறத்தல் கூடாது.

மாணுக்கன்: 'சத்து' என்பதற்கு, 'உள்ளது' என்றும், 'சித்து' என்பதற்கு, 'அறிவு' என்றும் அன்ரே பொருள் கூறுகின்றனர்?

ஆசிரியர்: ஆம்; அங்ஙனங் கூறுதல் ஓரளவு பொருந்துமே யன்றி, முழுவதும் பொருந்தாது. ஆதலின், அவை சித்தாந்தம் அல்ல. அஃது எவ்வாறெனில். 'இல்லது தோன்றுமாறில்லை. என்பது முன்னே விளக்கப்பட்டமையால், 'சத்து' என்பதற்கு, உள்ளது என்று மட்டும் பொருள் கொண்டால், அறியப்படும் பொருள்கள் யாவும் உள்ளனவே யன்றி இல்லாதனவல்ல வாகலின், 'பொருள்' எனப்படுவன யாவும் சத்தேயாய், 'அசத்து' என்பதே இல்லாதொழியும்.

மாணுக்கன்: 'பொருள்' எனப்படுவனயாவும் உள்ளனவே என்றல் எவ்வாறு? முயற்கோடு, ஆகாயத்தாமரை முதலியவை இல்லாத பொருள்கள் அல்லவோ?

ஆசிரியர்: அறியாது கூறினுய்; ஏனெனில், இங்கு நாம், 'பொருள்' என்று சொல்லி, ஆராய்ந்து வருவது, அனுபவமாய் அறியப்பட்டுவரும் பொருள்களையன்றி, வெறும் சொல்லளவிற் சொல்லி, 'உண்டோ, இல்லையோ' என ஐயுற்றும், இல்லாததை, 'உண்டு' என மயங்கியும் நிற்கும் பொருள்களை யன்ருதலின்.

மாணுக்கன்: முயற்கோடு, ஆகாயத்தாமரை போல்பவை ஒருவாற்ருனும். அறியப்படாத பொருள்களாதலின், அவற்றை. 'பொருளல்ல' என விலக்குதல் பொருந்தும்; கயிற்றில் அரவு,

கானலில் நீர் முதலியன போல்பவை அவ்வாறன்றி ஒருவாற்ருன் அறியப்படுதலின், அவற்றை, 'பொருளல்ல' என்றல் பொருந்து மாறில்லை. ஆகவே, கயிற்றில் அரவு பேரல்வன இல்பொருள் களாதலின், அவை 'அசத்து' எனப்படுமன்ருே?

ஆசிரியர்: நன்றே கூறினுய்! ஏனெனில், கயிற்றில் அரவு முதலியன அறியப்படா என்னுது, 'ஒருவாற்ருன் அறியப்படும்' என நீயே கூறினை. 'ஒருவாற்ருன் அறியப்படும்' எனவே; அவற்றையும், 'ஒருவாற்ருற் சத்து' எனக் கூறுதற்குத் தடை என்னை?

மாணுக்கன்: 'கயிற்றில் அரவு இல்லை' என்பது எல்லார்க்கும் உடன்பாடாதலின், அதனை, 'சத்து' என்றல், எவ்வாற்ருனும் பொருந்தாதன்ருே?

ஆசிரியர்: 'கயிற்றில் அரவு எவ்வாற்ருனும் இல்லை' என்பது ஒருவர்க்குங் கருத்தன்று; 'முழுவதும் இல்லை ஒருவாற்ருன் உண்டு' என்பதே யாவர்க்கும் கருத்து. ஆதலின், 'கயிற்றில் அரவைச் சத்தென்றல் எவ்வாற்ருனும் பொருந்தாது' என்றல் அடாது. கயிற்றில் அரவு ஒருவாற்ருன் உளதாதலாவது, அரவினது உருவத்தன்மை கயிற்றினிடத்திலும் இருத்தலேயாம். அத்தன்மை இல்பொருளன்ருகலின், அதுவே, இங்கு, ஒருவாற்ருன் உள்ள, அரவினது சத்துத் தன்மை என்பதனை உணர்.

இனி இதனை வேருெரு வகையாக விளக்குவோம்:

கயிற்றில் அரவினை, 'அசத்து' அல்லது 'இல்பொருள்' என்று கூறினுல், 'கயிறு அசத்தோ? அரவு அசத்தோ? கயிறும் அரவும் கூடிய கூட்டம் அசத்தோ?' என்று வினவுவார்க்கு, விடை கூறுதல் எங்ஙனம்?

'கயிறும், அரவும் அசத்தல்ல' என்பது உனக்கும் உடன்பாடு; ஆகவே, கயிறும் அரவும் கூடிய கூட்டத்தையே அசத்தெனல் வேண்டும். அது பொருந்தாது; ஏனெனில், கயிற்ருேடு அரவிற்குக் கூட்டம் பொருளின்கண் அன்றி, அதனை உணர்வோனது உணர்வின்கண்ணேயாம்; ஆதலின், இங்கு, 'அரவு' என்பது அரவென்னும் உணர்வையே யாகலானும், அவ்வுணர்வு உள்ளதன்றி இல்லதன்ருகலானும் என்க. எனவே, கயிற்றை, 'அரவு' என்று உணரும் மயக்க உணர்வும்,

கயிற்றை, 'கயிறு' என்று உணரும் மெய்யுணர்வுபோலவே உள்ளதன்றி இல்லதன்ரும். ஆகவே, உளதாய் நிற்கும் அவ்வளவில் இரண்டும் ஒருதன்மையனவே. அதனுல், 'சத்து' என்பதற்கு, 'உள்ளது' என்ற அளவே பொருள்கொள்வார்க்கு மெய்யுணர்வுபோல, மயக்க உணர்வும் சத்தேயாம்; மற்றும் எல்லாப் பொருள்களும் சத்தேயாம்.

மாணக்கன்: அவ்வாருயின், 'சத்து' என்பதற்கு முற்றி லும் பொருந்துவதாய பொருள் யாது?

ஆசிரியர்: 'சத்து' என்பதற்கு முற்றிலும் பொருந்துவ தாய பொருள், 'தோற்றம், நிலை, இறுதி' என்னும் வேறுபாடு கள் இன்றி, என்றும் ஒரு பெற்றியாய் நிற்றல் என்பதே. இதுவே, 'சத்து' என்பதன் சித்தாந்தப் பொருள். இப் பொருள் பற்றியே, 'சற்காரியவாதங் கூறின், எல்லாப் பொருள்களும் சத்தாய் முடியும்' என்பாரது கூற்று மறுக்கப்படுகின்றது.

எனவே, குடம், ஆடை முதலியன ஒருகாலத்து உள்ளன வாயினும், பின்னெருகாலத்து இல்லாதொழியும் தன்மையினை யுடைமையால், அவற்றைச் சைவ சித்தாந்திகள், 'சத்து' என்னது 'அசத்து' என்பர். எனவே, அவர்கள் அவற்றை, முயற் கோடு, ஆகாயப் பூ முதலியனபோல இல்பொருள் என்ருே, கயிற்றில் அரவு, கானல் நீர் முதலியனபோல மயக்கப்பொருள் என்ருே கருதுகின்ருர்கள் என்றல் பொருந்தாதாம். சைவ சித்தாந்தக் கருத்தே மெய்யுணர்வுடையோரது துணிபு என்ப தனை, அருணந்தி சிவாசாரியர் தமது சிவஞான சித்தியாரில்,

"உண்டுபோல் இன்ரும் பண்பின்
உலகினை அசத்தும் என்பர்"

எனக் கூறுதலால் அறியலாம். "அசத்தும்" என்ற உம்மை யால், 'பிறர் கொள்கைநோக்கிச் சத்தென்றும் சொல்வர் என்பது பெறப்பட்டது. படவே, 'பிறர் கொள்கைப்படி, பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளும் சத்து; சைவ சித்தாந்தத்தின்படி, பதி ஒன்றே சத்து' என்றதாயிற்று.

இவ்வாறே, 'சித்து' என்பது, சிற்றறிவினைக் குறியாது பேரறிவினையே குறித்தலும் சைவசித்தாந்தத்தின் மரபாயிற்று. ஏனெனில், ஒன்றையறியுமிடத்து அதுவாகவே அழுந்திநின்றறி தல், அதனுல், ஒன்றையறியுமிடத்து மற்ருென்றையறியாது

ஒவ்வொன்ருய் அறிதல், அறிவதனையும் அறிந்தவாறே அறிந்து நில்லாது விட்டுவிட்டு அறிதல், அறிந்ததனை மறத்தல், தானுக அறியாது அறிவித்தபின் அறிதல் என்னும் இக் குறைபாடுக ளெல்லாம் உள்ள அறிவை, 'அறிவு' என்றல் சிறந்ததன்று ஆகலான். எனவே, இறைவன் இக் குறைபாடுகளுள் ஒன்றும் இல்லாத பேரறிவினை உடையவன் ஆதலின், அவனே, 'சித்துப் பொருள்' எனப்படுகின்ருன்.

அறிவே இன்பத்துக்குக் காரணம் ஆதலின், குறைவில்லாது நிறைந்த பேரறிவையுடைய இறைவன், குறைவில்லாது நிறைந்த பேரின்பத்தையும் உடையவனுகின்ருன். ஆகவே, சத்தாயும். சித்தாயும் ஆனந்தமாயும் நிற்றலே பதியினது உண்மை இயல் பாகின்றது. பதியினது உண்மை இயல்புகளாக மற்றும் பல கூறப்படினும், அவை எல்லாம் இவற்றுள்ளே அடங்குவன வாகும். 'சத், சித், ஆனந்தம்' என்னும் மூன்று சொற்களே, ஒன்ருகச் சேரும்பொழுது, 'சச்சிதானந்தம்' என்று ஆகின்றன,

(தொடரும்)

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

I also had the good fortune of having worshipped at this sacred shrine of Lord Panchanatheeswara and Dharmasamvarthini. The temple maintenance is exceptionally good and all credit goes to Dharmapura Adhinam who have set very high standards in this field. The temple staff are courteous and provide able guidance to those worshippers who come here in large numbers from distant places.

I felt considerably relieved of the pressure of "Samsara" after having the darsan of the Lord and the goddess

(Sd.) P. N. Subramaniam,
Deputy Director of Panchayats
(Finance) Madras.

28—7—65.

# அருட் பேறு

சிவ. பிருந்தாதேவி

உலகில் பல்கோடிப் பொருள்கள் உண்டு. அவற்றைப் பெரியோர் மூன்ருக - முறையாக வகுத்தனர்,

1. தாஞக அறியக்கூடியது. 2. அறிவித்தால் அறியக்கூடியது. 3. அறிவித்தாலும் அறியாதது. தாஞக அறியக்கூடியது இறை. அறிவித்தால் அறிவது உயிர். அறிவித்தாலும் அறியாதது பாசம். உலகில் உள்ள பல்கோடிப் பொருள்களும் இம் மூன்றில் அடக்கமாகிவிடுகின்றன.

அறிவித்தால் அறியக்கூடிய உயிர், ஆண்டவனது திருவடியைத் துணையாகப் பற்றிஞல், ஆணவம் சிறிது சிறிதாக அகலும். ஆணவம் அற்றவன் ஆண்டவன். "ன்" - அவனுக்கு! "நீலமணி மிடற்ருெருவன்" "ஆலமர் செல்வன்" "இறைவன்" "வாலறிவன்". ஆணவம் உடையோர் நாம்! "ர்" - நமக்கு! - இனச் சார்பில் பெயரோடு "ர்" இறுதி நமக்கு!

ஆணவம் அற்றவன் - ஆசாபாசம் அற்றவன், நமக்கு முன்னே பிக்ஷாடன மூர்த்தியாய்ப் பிக்ஷைப் பாத்திரத்தை ஏந்துகிருன். அவனுக்கு இவ்வையகத்தில் எதுவும் தேவையா? - நாம் எதைக்கண்டு அஞ்சுகிருேமோ அது அவனது ஆபரணம். "பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்" என்பது பழமொழி! பாம்பு பரனுக்கு ஆபரணம்!

நாம் எதைக்கண்டு பயப்படுகிருேமோ அது அவனது ஆடை. "புலி என்ருலே கிலி" - அப் புலித்தோல் உடை! நமக்குத் தேவையானவற்றை நமக்காகக் கொடுத்து, நாம் பயப்படுகின்ற அல்லது அஞ்சுகின்ற பொருளைத் தனக்கெடுத்துக் கொண்ட இறைவனுக்கு, நம்மிடம் தேவையானவை எவை? - எதை நம்மிடம் பிக்ஷை கேட்கிருன்? - சிந்திக்கின்ருேம்!

நம்மிடத்தில் இருப்பது ஆணவம் - அது ஒன்றுதான் நமக்குச் சொந்தம். அன்பு மயமான ஆண்டவன், ஆணவத்

தைப் பிக்ஷையாகக் கேட்டு நமக்கு முன் பிக்ஷாபாத்திரத்தை நீட்டுகிறுன். நாம் நம்மிடம் இருக்கும் ஆணவத்தைக் கொடுத்து விடச் சித்தமாளுல், அவன் அருளை நமக்கு அள்ளி வழங்குகிறுன்.

"வழங்குகின்ருய் உன் அருளாரமுதத்தை"

என மணிவாசகரும், அருளியிருப்பது எண்ணி மகிழ வேண்டியதாம்.

ஆற்றல் அற்றவர்கள் - நாம்!.

ஆற்றல் அனைத்தும் உடையவன் - இறைவன்! ஒரு சொட்டுக் காவிரி நீரைத் தலையில் நிறுத்திவைக்க நமக்கு ஆற்றல் இல்லை - கங்கையைத் தனக்குள்ளே அடக்கி வைத்திருக்கிறுன் எம்பெருமான்! ஒரு துண்டு இனிப்பான பதார்த்தத்தை நம் வாயில் அடக்கிவைத்திருக்க நமக்கு அருகதை இல்லை. ஆலகால விஷத்தைத் தனக்குள்ளே அடக்கிவைத்திருக்கிறுன் பரமன்!

ஆற்றல் அனைத்தும் உடைய ஆண்டவனது திருவடியைத் துணையாகப் பற்றிஞல் துன்பங்கள் நீங்கும் - இன்பங்கள் பெருகும்!

மனிதர்களாகிய நம்மிடத்திலே இருப்பது ஆணவம், மாயை கன்மம் ஆகிய மூன்று மலங்கள். இந்த மூன்று மலங்களும் நாம் இறைவனது திருவடிப் பேற்றைத் துய்க்கவொட்டாது தடையாக இருப்பவை. இது கருதியே மேலோராகிய நூலோர், இம் மலங்களைப் பாதகத்தைச் செய்கின்ற காரணத்தால் "பாதக-மலம்" என்றனர்.

இறைவனது திருவடியிருக்கிறதே - அது பாத - கமலம்! மனிதர்களது பாதக - மலம் அறவேண்டுமாளுல் இறைவனது பாத - கமலத்திலே பற்று வைக்கவேண்டும்.

"இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே"

"போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர்"

"விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள்"

இவ்வாக்குகளைச் சிந்தித்து உணரவேண்டும்.

மக்களிலே ஒரு பகுதியினர்க்கு இறைவனது உருவத்தைப் பார்ப்பதிலே உவப்பு!

பிறிதொரு பகுதியினர்க்கு இறைவனது நாமத்தைச் சொல்லுவதிலே களிப்பு!

'மனிதப்பிறவி' வேண்டும் என்றூர் நாவுக்கரசர்!—எதற்கு? குனித்த புருவத்தைக், கொவ்வைச் செவ்வாயை, பனித்த சடையை, பவளம்போல் மேனியில் பூசிய பால் வெண்ணீற்றை, இனித்த முடைய எடுத்த பொற்பாதத்தைக் காண்பதற்கு மனித்தப்பிறவி வேண்டுமென்றூர்!

எல்லாச் சமயத்தவரும் பிறவி வேண்டாம் — பிறந்தால் துன்பம் என்று சொல்ல, அப்பரடிகள் ஒருவர் மட்டும்,

"மனித்தப் பிறவியும்
வேண்டுவதே — இந்த மாநிலத்தே"

என்று கூறக் காரணம்தான் என்ன?

"தாம் யார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்க வெண்குழையோர் காதில்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடி யிணையே குறுகினேமே"

என்ற பரிபக்குவநிலைக்குத் தம்மை ஆளாக்கிக்கொண்ட காரணத்தால், திருவடிப் பெருமை தெரிந்த காரணத்தால், தூக்கிய திருவடி துணையென நம்பியதால், அம்பலக்கூத்தன் ஆடிய பாவ—ராக—தாளம் நிறைந்த பரதத்தைக் காணப் பிறவி வேண்டுமென்று பேசுகிறூர்—அப்பர்! இது உருவ வழிபாட்டுச் சிறப்பினைப் பெரிதும் உணர்த்துகிறது. உருவ வழிபாட்டினுல்தான் மக்கள் உருப்பட முடியும்.

பசுவினுடைய உடம்பு முழுவதும், பால் இருப்பதாக விஞ்ஞானிகளும் மெய்ஞ்ஞானிகளும் ஒத்துக்கொள்கின்றனர். பசுவினுடைய உடம்பு முழுவதும் பால் இருந்தாலும், காதைப் பிடித்திழுத்தால் பால் வராது; கொம்பைப் பிடித்தாட்டினுல் பால் வராது! உற்ற பாலை நாம் பெற்றுக்கொள்ள வேண்டு மாயின் மடியைப் பிடித்திழுக்கவேண்டும். அதுபோல,

"அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய்"

இருக்கும் ஆண்டவனது சாளித்யத்தை — பேரருளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் நிச்சயமாகத் திருக்கோவி

லுக்குச் சென்று வழிபாடு செய்துதான் பெறவேண்டும். இது கருதித்தான்,

" நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே "

என்று அருளினர்! ஆண்டவனது ' அருட்பேறு ' பெறத் திருக்கோயில் வழிபாடு இன்றியமையாத தொன்றாகும்.

(தொடரும்)

---

## விசேஷ நாட்கள்

### விசுவாவசு வருஷம் ஆவணி மாதம்

| | |
|---|---|
| 12—8—65 | ஆவணி யவிட்டம் |
| 13—8—65 | காயத்ரீ ஜபம். (ஆடிக்கடை வெள்ளி) |
| 15—8—65 | சுதந்திர தினம் |
| 19—8—65 | ஜன்மாஷ்டமி |
| 20—8—65 | வேளூர்க் கிருத்திகை |
| 24—8—65 | பிரதோஷம். செருத்துணை நாயனார் திருநக்ஷத்திரம் |
| 25—8—65 | அதிபத்தநாயனார். புகழ்த்துணை நாயனார் ,, |
| 26—8—65 | இளையான்குடிமாற நாயனார் ,, |
| 28—8—65 | மறைஞானசம்பந்தர் ,, |
| 29—8—65 | சாமோபாகர்ம |
| 30—8—65 | விநாயக சதுர்த்தி |
| 2—9—65 | குலச்சிறை நாயனார் திருநக்ஷத்திரம் |
| 4—9—65 | குங்கிலியக்கலய நாயனார், ,, ஆவணிமூலம். |
| 8—9—65 | பிரதோஷம் |
| 9—9—65 | நடேசர் அபிஷேகம் |
| 11—9—65 | மகாளயபக்ஷ ஆரம்பம் |

# சோழமன்னர் திருக்கோயில்கள்

"திருநெறிச்செம்மல்"

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்

## 2. கங்கைகொண்ட சோழேச்சுரம்

### இராஜேந்திரன் :

கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன் என்று கல்வெட்டுக்கள் புகழ்ந்து கூறும் இராஜேந்திர சோழன், (கி. பி. 1012 முதல் 1044 வரை) முதல் இராஜராஜசோழனுக்கு அவன் கோப்பெருந்தேவியாகிய வானவன்மாதேவி என்னும் திருபுவனமாதேவிபால் மார்கழித் திருவாதிரையிற் பிறந்தவன். இவனை, இறைவன் நெற்றிக்கண் காணாத மற்றொரு காமவேள் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு புகழ்ந்துரைக்கிறது. இராஜேந்திரன் பெருவீரனாக விளங்கி வடநாடு கடாரம் முதலிய நாடுகளின்மேற் படையெடுத்துப் பெருவெற்றி கண்டவன். சிறந்த கப்பற்படைகளோடு கடல் கடந்து சென்று வென்ற இம் மன்னன் புகழ் உலகமெங்கும் பரவியது. கங்கைகொண்ட பெரு வெற்றியின் நினைவாகத் தான் புதியதாக அமைத்த தலைநகர்க்குக் கங்கைகொண்ட சோழபுரம் என்று பெயரிட்டனன், இந்நகர் கங்காபுரி, கங்கைமாநகர் எனவும் வழங்கப்பெற்றது. கங்கைகொண்ட சோழமன்னன் எடுத்த கோயில் கங்கைகொண்டசோழேச்சரம் என வழங்கப்பெற்றது. தன் தந்தையைப் போலவே இவனும் சிவநெறியை மேற்கொண்டொழுகினன்.

இராஜேந்திரன் கங்கை நீரைக்கொணர்ந்து தன் நாட்டைத் தூய்மைப் படுத்துவதற்காகவே வடநாட்டுப் படையெடுப்பு நிகழ்த்தினன் என்பது வரலாறு.

### கங்கைகோண்ட சோழபுரம் :

இது திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தில் உடையார்பாளையம் தாலுக்காவில் சிற்றூராகக் காட்சியளிக்கிறது. இராசேந்திரன் வடநாடு வென்ற பெருமைக்கு அறிகுறியாக, "கங்கைகொண்ட

சோழபுரம்'' என்னும் இந்நகரைப் புதிதாக நிர்மாணித்தான். தஞ்சைக் கோயிலைப் போலவே கங்கைகொண்ட சோழேச்சுரம் என்ற கோயிலைக் கட்டினான். சோழகங்கம் என்னும் வியத்தகு ஏரியையும் அமைத்தான்.

கங்கை நீருடன் திரும்பிய தானைத்தலைவனைக் கோதாவரிக் கரையில் இராசேந்திரன் வரவேற்றான். அந்நீரால் தான் கட்டிய மாநகர், கோயில், ஏரி இவைகளைத் தூய்மைப்படுத்தினான். கங்கை கொண்ட சோழபுரத்தில் கேரளன் என்னும் அரண்மனையொன்று இருந்தது. அங்கிருந்த ஏவலர் தொகுதிக்கு 'திருமஞ்சனத்தார் வேளம்' என்று பெயர். இன்று 'மாளிகை மேடு' என்ற திடர், கோயிலுக்கு அரைக்கல் தொலைவில் இருக்கிறது. இதுதான் அரண்மனை இருந்த இடம் என்பர்.

கங்கை கொண்ட சோழேச்சுரம் :

இராசராசன் கட்டிய பெரிய கோயிலைப் போன்றே இராசேந்திரனும் பெரிய கோயில் அமைத்தான். கங்கை கொண்ட சோழன் கட்டியதால் இப்பெயர் பெற்றது. ஆறு கோபுரங்களை உடைய இக்கோயில், அளவில் சிறியதாயிருப்பினும், தஞ்சைப் பெரிய கோயிலைவிடச் சிற்ப வேலையில் சிறந்ததாக இருக்கின்றது. திருச்சுற்று, காணப்படவில்லை. கீழைக்கோபுரம் இடிந்த நிலையிலுள்ளது.

விமானம் :

விமானம், பெரிய கோயில் விமானத்தைப் போன்றது. உயரம் 170 அடியும், 100 அடி சதுரமுமாய் அமைந்துள்ளது. மேலே செல்லச்செல்லச் சிறுத்துச் சரிவாக அமைந்துள்ளனவாக ஒன்பது அடுக்குகளையுடையது. விமானத்தில் நாற்புறங்களிலும் வாயில்கள், மாடங்கள், அழகிய பதுமைக் காட்சிகள் முதலியன அமைந்துள்ளன.

பெருமான் :

தஞ்சைப் பெரியகோயில் சிவலிங்கம்போலவே இங்குள்ள சிவலிங்கம் பெரியது. ஒரே கல்லால் ஆனது. சிவலிங்கப் பெருமானைக் கருவூர்த்தேவர் ஒன்பதாம் திருமுறையில் சிறப்பித்துள்ளார். திருச்சுற்றுக்களின் கற்கள் கொள்ளிடம் அணைக் கட்டுக்கு ஆங்கிலேயர் காலத்தில் பயன்படுத்தப்பட்டன.

மதில் சுற்று :

திருமதிலின் நீளம் 600 அடி, அகலம் 450 அடி, கனம் 4 அடி. திருமதிலை அடுத்து இரண்டுக்குந் திருச்சுற்று மாளிகை யிருந்தது. திருச்சுற்றில் பல சிறு கோயில்களுள்ளன. சந்திர சேகரர் கோயில் அழிவுற்றுளது. அம்பாள் கோயில் பிற் காலத்தே கட்டப்பெற்றுள்ளது. திருமதிலின் முன்புற மூலைகளி ரண்டிலும் புறமதில் நடுப்பகுதியிலும் அரைவட்டக் காவற்கூடம் இருந்திருத்தல் வேண்டுமென்பதற்கான அறிகுறிகள் காணப் படுகின்றன. உட்கோயிலுக்கு எதிரே பெரிய நந்தியொன்று இருக்கின்றது. இது செங்கல்லாலானது. உயரம் 20 அடி சிங்கமுகக் கிணறொன்று அற்புதமாக அமைந்துள்ளது.

உட்கோயிலும், லிங்கமும் :

உட்கோயிலின் நீளம் 340 அடி. அகலம் 100 அடி. மகா மண்டப நீளம் 175 அடி. அகலம் 95 அடி. அர்த்தமண்டபத்தின் இரு பக்கங்களிலும் அழகிய வாயிற்படிகள் உள்ளன. மகா மண்டபத்தில் எட்டுப் பந்திகளாக 140 கற்றூண்கள் உள்ளன. விமானம் உயரம் 186 அடி. கோயிலின் அடிப்பாகம் 100 சதுர அடி. உயரம் 35 அடி. சிவலிங்கம் பதின்மூன்று முழச் சுற்றுடையது. ஆவுடையார் முப்பதுமுழச் சுற்றுடையது. உயரம் பதின்மூன்றடி.

அர்த்தமண்டபம், மகாமண்டபம் :

அர்த்தமண்டபத் தூண்களின்மேல் நடனச்சிலைகள் பல உள் ளன. லிங்கத்தை நோக்கிய எதிர்ச்சுவர்மீது சண்டீசர் வரலாறு, தடாதகை திருமணம், பார்த்தனும் பரமனும் போரிடல், மார்க் கண்டர் வரலாறு முதலிய ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.

மகாமண்டபமே ஆயிரக்கால் மண்டபமாகத் தற்போது இருக்கிறது. இங்குச் சம்பந்தர் கற்சிலை, துர்க்கையம்மன் சிலை, நவக்கிரக அமைப்பு, சூரியன் தேர், அட்டதிசைப்பாலகர் இவை ஒரே வட்டக்கல்லில் அமைந்துள்ளன.

வாயிற்காவலர் :

பன்னிரண்டு வாயிற் காவலர் உள்ளனர். அவர்களின் உயரம் பன்னிரண்டடி. முதலிரண்டு சிலை, கோபுரச் சிதைவி

லுள்ளன. எஞ்சிய பத்தும் கோயில் வாயில், அர்த்தமண்டப வாயில், உள்ளறை வாயில், தெற்கு வடக்கு வாயில்களில் உள்ளன.

### சிற்பங்கள் :

விமானம், கோயிலின் வெளிப்புறம் இவற்றிலுள்ள சிற்பங்கள் வனப்புடையன. தென்னிந்திய சாவக சிற்பங்களினும் மேம்பட்டவை. கோயிலுள் தென்மேற்கில் சபாபதி கோயில், மேற்கில் அருணாசலீச்சுவரர் கோயில், தெற்கில் விநாயகர் கோயில், வடக்கில் சண்டிகேஸ்வரர்க்குப் பதமளித்த காட்சி முதலியனவும், அப்சர மாதரும், இராக்கத கூட்டங்களும் சிறந்ததாக அமைந்துள்ளன. இவை நரசிம்மனுடைய சிற்பங்களை அடிப்படையாகக் கொண்டவை. எனினும் அவற்றினும் மேம்பட்டு விளங்குகின்றன.

### மாளிகை மேடு :

மிகப்பரந்த இடத்தில் அமைந்துள்ள இது அரண்மனையாக முன்பு இருந்தது. இப்போது திருத்திய வாயிலாகவுள்ளது. இங்குள்ள வயல்களில் பல மேடுகள் காணப்படுவதுடன் செங்கற் சுவர்களும் காணப்படுகின்றன. பழைய அரண்மனை, கழிவுநீர், மழைநீர் செல்ல வாய்க்காலிருந்ததென்பது இன்றும் அவ்வாறே காணப்படுகிறது. மாளிகை மேடு, தெற்கு வடக்கு ஒன்றரை மைல் நீளமுடையது. கிழக்கு மேற்கில் ஒருமைல் நீளமுடையது.

கங்கைகொண்டசோழபுரத்தின் நான்கு திசைகளிலும் நான்கு காளிகளை எல்லைத் தெய்வங்களாக நிறுத்தினான். கோயிலைச் சுற்றிலும் சிற்றூர்கள், சுண்ணாம்புக்குழி, கணக்குவிநாயகர் கோயில், பொன்னேரி, பள்ளியோடை, பாகல்மேடு, சலுப்பை செங்கம்மேடு, முத்துசில்பாமடம், சப்போடை, மண்மலை, தேர்மேடு, மெய்க்காவல்புத்தூர், வீரசோழபுரம், வாணதரையன் குப்பம், குயவன்பேட்டை, பரணைமேடு என்ற பெயருடையனவாய் விளங்கின. அரண்மனையையும் கோயிலையும் இணைக்கும் சுரங்கமொன்றுள்ளது. இவ்வுண்மையை கோயிலுக்கும் மாளிகை மேட்டிற்கும் இடையிலுள்ள ஓடையிற்காணலாம். இன்று இடிந்துகிடக்கும் கோபுரம் ஏறத்தாழ எண்பதடி உயரமாகக் கலசங்கள் பெற்று இருந்ததென்றும் கூறப்படுகிறது.

சோழகங்கம் :

இராசேந்திரனால் வெட்டப்பட்ட இவ்வேரி தற்போது பொன்னேரி என அழைக்கப்படுகிறது. இப்போது நீரில்லாமல் மேடாகவுள்ளது. தெற்கு வடக்காக பதினாறு மைல் நீள முடையது. உயர்ந்த கரைகளை உடையது. பெரிய கால்வாய் ஒன்று அங்கிருந்து கொள்ளிடத்திற்கு வெட்டப்பட்டுள்ளது. அக்கால்வாய்மூலம் ஏரிக்கு நீர் கொண்டுவரப்பட்டது. மற்றொரு கால்வாய் வெள்ளாற்றிலிருந்து வந்தது. கால்வாயின் கரைகள் இன்றும் உள்ளன. இவ்வேரியினது நீர் திருச்சி, தென்னாற்காடு கோட்ட விளை நிலங்கட்கு உதவியது. இவ்வேரி இப்போது காடடர்ந்த இடமாகிவிட்டது. இப்போது புதுப்பிக்கும் வேலை நடைபெறுகிறது. சமவெளியில் 16 மைல் நீளம் கரைபோடுதல், நீரைத் தேக்குதல், அறுபது மைல் நீள கால்வாய் வெட்டி நீர் கொணர்தல் என்பன எளிதான செயலாகா. இவற்றைச் சிறப் பாகச்செய்து முடித்த இராசேந்திரசோழன் போற்றுதற்குரியவ னன்றோ?

( தொடரும் )

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

இன்று மாலை ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் தர்மசம்வர்த்தனிதேவி ஆலயங்களை எனது குடும்பத்துடன் தரிசித்துப் பேரின்பம் அடைந்தோம். இப்புராதன ஆலயங்களை ஸ்ரீ தருமை ஆதீனம் சிறந்த முறையில் தெய்வ வழிபாட்டிற்கு அமைத்து இருப்பது உலக மக்கள் உய்வதற்கே.

(Sd.) K. V. Sambandam
District Judge,
Addl. Tribunal for
disciplinary Proceedings,
Madurai - 2.

23—7—65.

# நமது தேவாலயங்களும் அவைகளின் பாதுகாப்பும்

திரு. நீலகண்டசர்மா

பேரன்புடையீர்!

நமது கோயில்கள் மற்ற மதஸ்தர்கள் கட்டியிருப்பது போல் இறைவனை வணங்குவதற்கு உள்ள மடங்கள் மட்டுமல்ல; நாட்டையே மாற்றியமைக்கும் சக்தி வாய்ந்த நிகழ்ச்சிகள் காலப் போக்கில் பல நடந்தும், நமது சமயம், கலாசாரம், கலைகள், சாத்திரங்கள் முதலிய எல்லாவற்றையும் இவ்வளவு நாளாகக் காப்பாற்றியும், வளர்த்தும் வந்தவை இக்கோயில்கள்தாம்.

'In India as in Greece art was the handmaid of Religion and the houses of Gods afforded scope for the expression of the artistic genius of the people.'
—Dr. K K. Pillai.

'The South Indian Temple was the nuclius around which centred fhe religious, social, and cultural life of the people as patron of learning and fine arts as land-holder and consumer of goods and services, as Bank, Museum, Park and Hospital and as agent, of poor relief the Temple played a unique role'
—Dr. K. R. Sreenivasan.

South India, and particularly the Tamil country presents a good scope for study of development of Religion endowed as it is with a large number of religious monuments and Monumental scriptures
—K. R. S.

கத்தோலிக்க குருவான 'போப்' வசிக்கும் வாடிகன் மாநகரில் நடைபெற்ற கிறிஸ்துவ குருமார்களின் மாநாட்டில் பிஷப் தனது சொற்பொழிவில் பின்வருமாறு கூறினர். "ஒரு

மதம் நாலாயிரம் ஆண்டுகளாக எத்தனையோ மாறுதல், சுழற்சிகள் ஏற்பட்ட பின்பும் அமைதியாக நீடித்து நிலைக்கு மானால், அந்த மதம் உண்மையான தத்துவங்கள் கொண்ட தாகும்.'' அவ்வாறு தத்துவம் நிறைந்தது நம்மதம்.

Religion is the mainfestation of the Divinity already in man —Swami Vivekananda.

இதை நமக்கு கோவில்களில்தான் அனுபவிக்க முடியும். கோவில்கள், நிகரற்ற ஓவியங்கள், அதிசயமான கல்வேலைகள், சரித்திரக் குறிப்புக்கள் நிறைந்த கல்வெட்டுக்கள் இவைகளைக் கொண்டது. அன்று கோவில்கள் கல்வி வளர்க்கும் கலாசாலைக ளாகவும். அறம் கூறும் நீதிமன்றங்களாகவும், சித்திர சாலைக ளாகவும், சங்கீத கூடமாகவும் விளங்கின. ஏன் • என்றும் சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கு நம் நாட்டிலுள்ள கோவில்கள் தாம் முக்கிய தெளிவுகள் காட்டும் ஏடுகளாகத் திகழ்கின்றன.*

மேலும் அவர் கோவில்களின் பெருமையைப்பற்றி இவ்வாறு கூறுகிறார்:

While such impartation of charactiristies of art to life is true of secular centres of synthatical culture there comes from sacred centres, a special double exhultation of the creative spirit in that. It is not only concentrated on decoration of expression but is devoted to devotion.

இவ்வாறு முக்கியம் பெற்ற கோவில்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் நம்மைச் சார்ந்ததாகும்.

உலக அமைதியை நிலைநாட்டும் வழிகள் அனைத்தையும் ஆராய்ந்துவரும் உலக அமைதிச் சபையின் பிரிவாகிய கலைக் களத்தில் சென்ற சில மாதங்களுக்கு முக்கியக் கொள்கையாக, "இந்தியநாட்டின் புராதனப் பொருள்களையும், தத்துவம் நிறைந்த ஆலயங்களையும், ஆலயத்திலுள்ள கோபுரங்கள், உருவங்கள் இவைகளையும் காப்பாற்றுவது முக்கியமானது

---

* Dr. J. H. consins The Great centres of Devotion in or comparative manner that is fruitful of Historical knowledge and artistic ideas.

என்றும், அந்தச் சபையின் குழுகூடிய விரைவில் இந்தியாவிற்கு வருவதென்றும் முடிவு செய்து இருப்பதையறிந்து, நாம் நமது கடமையைச் சிந்திக்கவேண்டும்.

மேல் நாடுகளில் எல்லாம், காலம் சென்ற பெரியவர்களுடைய முக்கியத்துவம் நிறைந்த வீடுகள், சரித்திர உண்மை காட்டும் இடங்கள், அபூர்வமான பொருள்கள் முதலானவைகளை மிக மிகக் கவனத்துடன் காப்பாற்றி வருவதை நாம் அறிவோம்.

இடைக்காலத்தில் ஏற்பட்ட யுத்தங்களாலும், இடி வெட்டுக்களாலும் கொடும் (புயல்) காற்றுக்களாலும், இயற்கையின் வேறு விதமான கோபங்களாலும், அழிந்த ஆலயங்கள் எவ்வளவு என்று கணக்கிட முடியாது. காரைக்கால், காவிரிப்பூம்பட்டினம், மகாபலிபுரம் முதலான இடங்களே அதிற்குச் சான்றுகளாகும். சமீப காலத்தில் தனுஷ்கோடியில் இயற்கையன்னையின் கோபக் கனலுக்குப் புனிதமான இடம் இரையானதை நாம் உணர்ந்தோம்.

கோவில்கள் நம் நாட்டில் இரண்டு மூன்று விதங்களில் காணப்படுகின்றன. சுண்ணும்பு செங்கல் சுவர், மரக்கூரை, அதில் செம்புத்தகடு வேய்ந்தது இப்படி ஒருவிதக் கோயில்கள்.

கல்சுவர், கல்தளம், செங்கல்லும் சுண்ணும்பும் கொண்டு வேய்ந்த மண்டபம் கொண்டது ஒரு வகை.

முன் சொன்ன இரண்டும் கலந்து கட்டப்பட்ட கோயில்கள் ஒரு விதம்.

வாசல்கள் மட்டும் மரத்தால் செய்ததும், பாறை குடைந்து எடுத்ததுமான ஒரு வகைக் கோயில்கள்.

இப்படிப்பட்ட பலவித கோயில்களை நாம் பாதுகாப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது முக்கியம். அதற்குப் பல வழிகள் இருக்கின்றன.

(1) சமுத்திரக் கரைகளில் இருக்கும் கோவில்களுக்குக் கொந்தளிப்பு ஏற்பட்டுச் சேதம் வராமலிருக்க, கோவில்களின் கரைப் பக்கமாகச் சுவர் கட்டித் தடுக்கலாம்.

(2) கல் சுவர்களிலும், மண்டபங்களிலும் ஏற்படும் சிறு வெடிப்புக்களில் சில செடிகள் முளைக்கின்றன; அதைக் கவனி

யாமல் விட்டால், மரமானபின்பு மண்டபங்களில் ஒழுக்கு ஏற்படுவதற்கும் சுவர்களில் கற்கள் நகர்ந்து இடைவெளி ஏற்படுவதற்கும் அவை காரணமாகின்றன. ஆகையால் அப்போதைக்கப்போது செடிகளை எடுத்துவிட்டு, அந்த இடங்களில் சிமிண்டு வைத்து அடைக்கவேண்டும்.

(3) கல்தரையில்லாத அநேக இடங்களில் இப்போது சிமிண்டு போடப்பட்டு இருக்கிறது. அந்த இடங்களில் எண்ணெய் வழியும்படியாக விளக்குகளும் போடப்பட்டிருக்கின்றன. விளக்கிலிருந்து எண்ணெய் வழியும் இடங்களில் கற்கள் பதிக்கவோ, அல்லது விளக்குகளின் கீழ் எண்ணெய் வடிந்தால் தாங்கும்படியாகத் தகடு பொதிந்து வைக்கவோ செய்யலாம்.

(4) அநேக கோவில்களில் அடிக்கடி வெள்ளையடிப்பு நடக்கிறது. அதில் சில சமயங்களில் விஷயம் தெரியாத ஆட்கள் ஏற்பட்டு, அழகிய கல் பணிகளை ஆபாசமாக்கி விடுகிறார்கள். சித்திர வேலைப்பாடுள்ள கல்பணிகளை வருஷத்திற்கு ஒரு தடவையாவது எண்ணெய் போட்டுக் கழுவிச் சுத்தம் பண்ணுவது நன்றாக இருக்கும்.

(5) பல கோவில்களின் சுவர்களில் பழங்காலச் சித்திரங்கள் பாதுகாப்பில்லாமல் அழிந்தும், அழியாமலும் இருக்கின்றன. அவற்றைத் தகுதியுள்ளவர்களைக் கொண்டு பூர்த்தி செய்தும் காற்றிலும் வெயிலிலும் மங்கிப் போகாமல் இருக்க வர்ணங்கள் பூசியும் காப்பாற்றவேண்டும்.

(6) கல்வெட்டுக்களுள்ள கோவில்களை இன்னும் கொஞ்சம் கூடுதலாகக்கவனிக்க வேண்டும். சாதாரணமாகக்கல்வெட்டுக்கள் சுவர்களில் அமைக்கப்படுகின்றன. சில இடங்களில் தனியாகக் கல்வெட்டுக்கள் செய்து ஒவ்வொரு இடங்களில் ஸ்தாபித்திருக்கிறார்கள். பாறைகளிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. சுவர்களில்காணப்படும்கல்வெட்டுக்களை நன்றாகச்சுத்தம் செய்து, எண்ணெய் விட்டுத் துடைத்து வைப்பதோடு நாலுபுறங்களிலும் (பார்டர்) சிறு சுற்றுச் சுவர் கட்டிவைப்பது நலம். தனியாக இருக்கும் கல்வெட்டுக்களை இடிந்து பொடிந்து போகாமல் பாதுகாப்பது நலம்.

பாறைகளில்காணும் கல்வெட்டுக்கள் ஆட்கள் நடமாடுவதால் கால்மிதிபட்டுத்தேய்ந்துபோகஇடமுண்டாவதால், அந்த மாதிரி

கல்வெட்டுக்களின் (காப்பி) பிரதி எடுக்காதவைகளைக் கூடிய சீக்கிரம் எடுக்க ஏற்பாடு செய்வதோடு, அதன் மீது ஆட்கள் நடமாடுவதைத் தடுப்பது மிகவும் நலம். அதற்குச் சுற்று வேலி யாகக் கம்பிகள் வைக்கலாம். மழையில் நனையாமலிருக்க கரைகள் போட வசதி செய்யலாம். ஏனெனில் இந்தக்கல்வெட்டுக்கள்.தாம் நம் பழங்கால சரித்திரத்திற்கும் நாகரீகத்திற்கும் ஆதாரமாக இருக்கின்றன.

(7) யாத்ரீகர்கள் அதிகப்பட்டு வரும் இந்நாளில், ஒவ்வொரு கோயில் வரலாற்றையும் தெரிவதற்கு ஆசைப்படுவோர் எண்ணம் நிறைவேற அவற்றை அச்சிட்டுக் குறைந்த விலைக்குக் கொடுப்பது நல்லது. அவசியமிருந்தால் படங்களைச் சேர்ப்பதும் நன்ருக இருக்கும். அப்படிச் செய்யாவிடில், ஆதாரமற்ற, அர்த்த மில்லாத கதைகளை யாராவது பிரசுரிக்க இடமளிக்கிறது.

(8) முக்கியமான தேவஸ்தானங்களில் பொதுமக்களுக்கும், அர்ச்சகர்களுக்கும், மற்ற கோவில் பணியாளர்களுக்கும் தெரிந்திருக்கவேண்டிய விஷயங்களைப் படிப்பதற்கு அவசியமான சமய நூல்கள் வைத்திருப்பது நலம்,

சுத்தமான தேகத்தில்தான் சுத்தமான மனதிருக்கும். அது போல், தேவாலயங்கள் சுத்தமாய் வைத்திருந்தால்தான், அங்கு எழுந்தருளியிருக்கும் தேவதைக்கு தெய்வத்தன்மை வளர்ந்து வரும். அந்த மாதிரி, கோவில்களிலும், கோவில் வேலை பார்க்கும் ஆட்களிடமும் தூய்மை நாளுக்கு நாள் பழக்கத்தில் வருவது மக்களின் பரிசுத்தத்திற்கும் காரணமாகும்.

சாதாரணமாக, கோவில்களில் சிலையினலும், மரத்தாலும், உலோகங்களாலும் செய்யப்பட்ட விக்கிரகங்கள் தாம் ஆராதிக்கப் படுகின்றன. சிலாவிக்கிரகங்கள் அநேகமாகச் செய்யப்பட்டுப் பீடத்தில் பிரதிஷ்டித்து அஷ்டபந்தனம் என்னும் சேர்க்கை மருந்தினல் இடையில்லாமல் பொருத்தப்படுகின்றன.

பால் முதலிய சாமான்கள் அபிடேகம் செய்வதினல் நாளடைவில் அந்த அஷ்டபந்தனம் கெட்டுபோய், சுவாமிக்கும் பீடத்திற்கும் இடையே துவாரம் ஏற்பட்டு விக்கிரகத்திற்கு அசைவு, ஏற்படுவதுமட்டுமல்லாமல், கவனக் குறைவால் அந்த இடத்தில்புழுக்கள் உண்டாவதற்குங்கூட இடமாகிறது. இப்படி ஏற்பட்டால் அந்த ஊருக்கே நாசமேற்படும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

அதனல் உரியகாலங்களில் ''அஷ்டபந்தனம் சாத்திப் பெருஞ்சாந்தி நடத்தவேண்டும். சிலவிக்கிரகங்களில் வழக்கமாக எண்ணெய்க் காப்பு நடத்துவதுண்டு. எண்ணெய் போட்டுப் பின்னல் ஈஞ்சை அல்லது வாகைப்பட்டைப்பொடியால் சுத்தம் பண்ணும் வழக்கம் பழையகாலத்திலிருந்தே உண்டு. அது, கல்லுக்குப்பலத்தையும் தூய்மையையும், கொடுக்கிறது. மரத்தால் செய்யப்பட்ட விக்கிரகங்களைச் சுத்தம் பண்ண ஈஞ்சை அல்லது வாகைப்பொடிகளை உபயோகிக்காமல் சிறு பயறு, கோதுமை இவைகளின் மாவை உபயோகித்து வருவதுதான், சாஸ்திர நிபந்தனை.

உலோக விக்கிரகங்களை நடவடிக்கையில் புளி, எலுமிச்சம் பழம் கரைத்த தண்ணீரால், அபிஷேகம் செய்து, விபூதியால் துடைப்பதுண்டு. அது காலப்பழக்கத்தில் விக்கிரகங்களைத் தேய்த்துவிடுகின்றது. ஆகையால் கூடுமானவரை மேல் சொன்ன படி செய்வதுதான் நலம்.

மர விக்கிரகங்களைப் பொறுத்த அளவில் இந்த யோசனையே வேண்டாம். இது போக, கடுசர்க்கராயோக முறையில் அமைந்த விக்கிரகங்களுமுண்டு. அவற்றிற்கு மனிதன் உடம்பில் உள்ளபடி எலும்புகள், நரம்புகள் உறுப்புக்கள் எல்லாம் விதிக் கப்பட்ட சாமான்களால் செய்து, மனித தேகம்போல் இணைத்து அந்தக் கூடத்திற்குமேல் பட்டினல் மூடி, பலசாமான்கள் சேர்த்து மிகச் சிரமத்துடன் தயார் பண்ணும் பசை பூசி 'பாலிஷ்' (வர்ணம்) கொடுத்து அமைக்கப்படுகிறது. அந்த மாதிரி மூலஸ்தானத்திலுள்ள விக்கிரகங்களுக்கு அபிஷேகம் கிடையாது. அபிஷேகம் பண்ணவும் முடியாது.

அவற்றிற்கு அர்ச்சனை விக்கிரகங்களில்தான் அபிஷேகங்கள் நடத்தப்படுகின்றன. அந்தமாதிரி கடுசற்கரா யோக விக்கிர கங்களுக்குக்காலப்பழக்கத்தில் கோவிலுக்குள் ஏற்படும் வெப்பத் தினல் சில குறைவுகள் ஏற்படலாம். அதைத் தடுக்க அந்த மாதிரி விக்கிரகங்களுக்குத்தங்கத்திலோ அல்லது வெள்ளியாலோ கவசம் செய்து, அந்த விக்கிரகத்துடன் இணைத்துவிடுவது ஒன்றுதான் சரியான வழி.

இந்த மாதிரி இல்லாமல் விக்கிரகங்கள் அங்கஹீனம் ஏற்படு மானல், அவைகளை வைத்துப்பூசிப்பது நல்லதன்று. அவ்வாறு செய்தால், பூசைசெய்யும் நபரையும், ஊரையும் நசிப்பித்துவிடும். நிவர்த்தியில்லாத உருவங்களுக்கு விதிப்படி கம்பிகள் போட்டுக் கட்டியும், மேலங்கி சார்த்தியும் கலச சுத்திசெய்து பூஜை நடத்து வது மிகவும் அவசியம்:

மனிதன் தன் தேகத்தைப் பாதுகாப்பதுபோல், தெய்வ உருவங்களைப் பாதுகாக்கவேண்டும். கோயில்களைப் பராமரிக்க வேண்டும். ஆகையால் பெரியவர்கள்,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"

என்றார்கள்.

இதெல்லாம் லௌகீகமான காரியங்கள். வைதீகமான அதாவது தந்திர சாஸ்திரப்படியும் கோவிலும், விக்கிரகங்களும் ஜீரணமாகாமலிருக்கவும், சுத்திக்காகவும் செய்ய வேண்டிய காரியங்கள் பல அமைந்துள்ளன.

கோவிலுக்குப் பிரசாத சுத்தி, வாஸ்து சுத்தி. வாஸ்துபலி, கும்பாபிஷேகம் முதலியன அந்த வகையில் சேர்ந்தவையாகும். இவைகளுக்குப் பொதுவாகச் சில நியமங்களும், தேச பேதம் தேவதாபேதம் என்ற காரணங்களால் வேற்றுமையும் உண்டு.

சில கோவில்களில் வசந்தோத்ஸவ காலத்தில் எள்ளும் தேங்காயும் வறுத்து எண்ணெயில் அரைத்துக் கர்ப்பகிரகத்தின் சுவர்களில் பூசுவதுண்டு அதனால் உள்ளே இருக்கும் தேவதைக்கு உஷ்ணம் தட்டாமல் இருப்பதோடு கற்களின் சூட்டினால் பொரியாமல் இருப்பதும் ஒரு பயனாகும். வெளிப்பிரகாரங்களில் காவி அரைத்துப் பூசி வருவதும் இதே காரணத்தால் தான்.

விக்கிரஹாராதனை முதலில் சுவர்களிலும், பின்னால் துணியிலும் பலகையிலும் சித்திரம் வரைந்து ஆரம்பித்தார்கள். எனினும் அதற்குமேல் செங்கல்லும், சுண்ணாம்பும் கொண்டு ஒவ்வொரு வடிவத்தையும் செய்ய ஆரம்பித்தனர். எனினும் அதற்குப் பின்னால் மரத்தில் செதுக்கியும் அதற்குப் பின்னால் கற்களில் கொத்தியும் விக்கிரகங்கள் அமைத்தார்கள். எனினும் மனிதனுக்கு அறிவும் ஆராய்ச்சியும் அதிகப்பட, பல பொருள்களையும் கொண்டு விக்கிரகங்களும் செய்யப்பட்டன. எனினும் இவைகளுக்கெல்லாம், முன் சொன்னவாறு - அதாவது தேவதைக்கு உசிதமான சாமான்களைக் கொண்டு, சுத்தியும் பாதுகாப்பும் செய்யவேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

மனிதன் உடம்பிற்கு நீடூழிகாலம் வாழ்வதற்கெனச் செய்து வரும் எண்ணெய் ஸ்நானம் முதலியன. அப்படியே மனிதன் சிருஷ்டியான விக்கிரகத்தில் அமைத்திருக்கும் கடவுளுக்கும் ஆகுமாறு செய்து சந்தோஷமடைகிறார்கள். எண்ணெய், பால்,

தயிர், நெய், பழங்கள் இவைகளால் அபிஷேகம் பண்ணுவதும் உடம்பிற்கு எவ்வளவு நல்ல பலனளிக்கிறது என்று அனுப வஸ்தர்களுக்குத் தெரியும். சந்தனம், விபூதி முதலியவை பூசினுல் எவ்வளவு நல்ல பலன் கிடைக்கிறது என்று சற்று யோசித்துப் பார்த்தால் தெரியும். இன்னும் குழந்தைகளை எண்ணெய் தேய்த்துப் பாசிப்பயற்றுப்பொடி முதலியவை போட்டுக் குளிப் பாட்டி, சாம்பிராணி முதலியவைகளின் புகைகாட்டி, பவுடர் பூசுவதை நாம் தினம் பார்க்கிறோம், இதைத்தானே நாம் கோயில்களிலும் செய்கிறோம்! ஹோமங்களுக்கு உபயோகப் படுத்தி வரும் சாமான்களிலிருந்து வரும் புகை கோவிலுக்குள் நிறைந்து, அந்த இடத்தை எவ்வளவு சுத்தம் பண்ணுகிறது என்றும், அதுபோல் கோவில்களில் அஷ்டபந்தனம் செய்யும் சாமான்கள், அபிஷேகத்திற்கு உபயோகப்படுத்தும் சாமான் கள். பூஜைக்கு உபயோகப்படுத்தும் வில்வம், துளசி புஷ்பங்கள் இவைகள் உபயோகப்படுத்துவதால், நமக்கு ஏற் படும் நன்மைகள் எவ்வளவு என்றும் மருத்துவத்துறை ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிருர்கள். நிற்க, மலையாளத்தி லும், நமது மாகாணத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் பூஜை பண்ணும் ஆட்கள் கோவிலை விட்டு வெளியே வந்தால் குளியாமல் உள்ளே செல்லக்கூடாது என்பதும், பூஜைகள் முடிந்த பின்தான் உணவு அருந்தலாம் என்பதும், உடுப்புப் போட்டுக் கோவிலுக்குள் செல்லக்கூடாதென்பதும் தனிச்சிறப்பு வாய்ந்த நடவடிக்கைகள். இவைகள் மனச்சுத்திக்கு மிகவும் அவசியம். இந்த வழக்கம் மற்ற இடங்களிலும் தொடருவது நலம்.

கருத்து, மனம், செய்கை இவை மூன்றும் ஒன்றுபட்டுச் செய்யும் காரியங்கள்தாம் நன்ருயிருக்கும். அதற்கென்று ஏற்பட்டவை மந்திரங்கள். அவை பலவும் இப்போது பூசை செய்யும் ஒரு சிலருக்கு மட்டும் தெரியக்கூடிய பாஷையில் அமைந் துள்ளன. அவைகள் அர்த்தமில்லாத வார்த்தைகளல்ல. அதைத் தெரிந்து கொள்வதுதான் நம் கடமை. தெரியாத பாஷையில் இருப்பது, அந்தப் பாஷையின் குற்றமல்லவே.

கோவில்கள் காப்பாற்றப்பட்டால், விக்கிரஹாராதனை காப்பாற்றப்படுவதோடு, நம் சமயம், கலாசாரம், கலைகள் முதலியன காப்பாற்றப்படும். சமயத்தை அடிப்படையாகக் கொண்ட நம் நாடு முன்னேற்றமடைய வேண்டுமானல், சமயம் காப்பாற்றப்பட வேண்டும். அதற்காக நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்ற வேண்டுகோளோடு நான் முடித்துக் கொள்கிறேன்.

## ॥ शरभाष्टकम् ॥

देवाधिदेवाय जगन्मयाय शिवाय नालीकनिभाननाय ।
शर्वाय भीमाय शराधिपाय नमोऽस्तु तुभ्यं शरभेश्वराय ॥
शीतांशुचूडाय दिगम्बराय सृष्टिस्थितिध्वंसनकारणाय ।
जटाकलापाय जितेन्द्रियाय नमोऽस्तु तुभ्यं शरभेश्वराय ॥
कलङ्ककण्ठाय भवान्तकाय कपालशूलाङ्ककराम्बुजाय ।
भुजङ्गभूषाय पुरान्तकाय नमोऽस्तु तुभ्यं शरभेश्वराय ॥
शमादिषट्काय यमान्तकाय यमादियोगाष्टकसिद्धिदाय ।
उमाधिनाथाय पुरातनाय नमोऽस्तु तुभ्यं शरभेश्वराय ॥
घृणादिपाशाष्टकवर्जिताय खिलीकृतास्मत्पथिपूर्वकाय ।
गुणादिहीनाय गुणत्रयाय नमोऽस्तु तुभ्यं शरभेश्वराय ॥
कालादिवेदामृतकन्दलाय कल्याणकौतूहलकारणाय ।
स्थूलाय सूक्ष्माय स्वरूपकाय नमोऽस्तु तुभ्यं शरभेश्वराय ॥
पञ्चाननायाखिलभास्कराय पञ्चाशदेकर्णपराशराय ।
पञ्चाक्षरेशाय जगद्धिताय नमोऽस्तु तुभ्यं शरभेश्वराय ॥
हराय भीमाय हरिप्रियाय भवाय शान्ताय परात्पराय ।
मृडाय रुद्राय त्रिलोचनाय नमोऽस्तु तुभ्यं शरभेश्वराय ॥

इमं स्तवं जपेद्यस्तु शरभेशाष्टकं नरः ।
तस्य नश्यन्ति पापानि रिपवश्च सुरोत्तमाः ॥

### शरभगायत्री ।

सालुवेशाय विद्महे पक्षिराजाय धीमहि । तन्नो रुद्रः प्रचोदयात् ।

## ॥ श्री बिल्व कवचम् ॥

देवर्षे शिवभक्ताग्र्य ब्रह्मात्मज महामते ।
तद्बिल्वकवचं पुण्यं वदस्व मम सुव्रत ॥
भो भो नृपतिशार्दूल वक्ष्यामि श्रुतिगोपितम् ।
श्रीबिल्वकवचं दिव्यमायुरारोग्यवर्धनम् ॥
सर्वपापक्षयकरं भूतवेतालखण्डनम् ।
भुक्तिमुक्तिप्रदं नृणामष्टैश्वर्यविधायकम् ॥
श्रीबिल्वकवचस्यास्य नारदोऽहमृषिः स्मृतः ।
छन्दोऽनुष्टुप्देवता च मृडानी सर्वदायिनी ॥
शक्तिस्त्रिशूलधारी च कीलकं क्रौञ्चदारणः ।
एवं ध्यायेद्वृक्षराजं पापारण्यदवानलम् ॥
श्रीमद्बिल्वनगं सुरासुरनुतं साम्बस्वरूपं सदा
देवेन्द्रप्रमुखप्रशस्तविभवं शास्त्रार्थसद्वैभवम् ।
विद्याकीर्तिपशूकलत्रसुतदं गङ्गाधरज्ञानदं
श्रीमद्धोमयजं नमामि सततं शम्भुप्रियं शान्तिदम् ॥
शिरः पातु महाबिल्वो ललाटं शङ्करप्रियः ।
भ्रुवौ भक्तार्तिशमनो नेत्रे नारदवन्दितः ॥
कर्णौ श्रीकमलाकान्तस्तालु मे मदनार्तिहा ।
ओष्ठौ सर्वार्तिशमनो दन्तपङ्क्ती शिवप्रियः ॥

जिह्वां जगद्धितकरो वक्त्रं वारिजपूजितः ।
चिबुकं सुरभेः पुत्रः कण्ठं कालप्रभञ्जनः ॥
भुजौ वृक्षेश्वरः पातु हस्तौ लक्ष्मीकरार्चितः ।
वक्षो मे नीलमेघाभः उदरं भौमपूजितः ॥
नाभिं कल्मषहारी च गुह्यं गुरुसुरार्चितः ।
कटिं कण्टकधारी च पृष्ठं देवजनप्रियः ॥
जङ्घाद्वयं शुभाङ्गश्च पादौ मम जगत्रयः ।
ऊर्ध्वं मुनिप्रियः पातु ह्यधस्तात्सकलार्थदः ॥
पुरतः पृष्ठतश्चैव पार्श्वतः सर्वमङ्गलः ।
एतच्छ्रीबिल्वकवचं समस्तभयखण्डनम् ॥
चोरव्याघ्रभये चैव निर्जने कण्टकान्विते ।
विपिनेऽग्निभये चैव जप्त्वा विजयमाप्नुयात् ॥
पुत्रपौत्रप्रदं दिव्यं क्षयापस्मारनाशनम् ।
विद्यां पशून् श्रियं चैव प्राप्नोति मनुजो जपन् ॥
त्रिसन्ध्यं यःपठेन्नित्यं पापं तस्य न विद्यते ।
पूजादौ यः पठेन्नित्यं पूजान्ते तु विशेषतः ॥
सर्वापराधं क्षमते श्रीमत्कल्पहरः शिवः ।
न्यूनातिरेकदोषाद्यैर्मुच्यते पठनान्नृप ॥
धनधान्यसमृद्धिं च शिवसायुज्यमाप्नुयात् ।
इत्येतत्कवचं प्रोक्तं बिल्वस्य नृपसत्तम ॥

श्री बिल्वककवचं संपूर्णम् ।

**கவசம் :**

போரில் பகைவரால் ஏவப்படும் வேல், ஈட்டி, பாணம் முதலிய ஆயுதங்களால் போர்வீரனுடைய உறுப்புகளுக்கு நாசம் உண்டாகலாம். அவ்விதம் ஆயுதங்களால் ஆபத்து ஏற்படாமல் இருப்பதற்காக உலோகங்களால் ஆன சட்டை போல் அணியப்படுவது கவசம் எனப்படும். மக்கள் தங்களுடைய உறுப்பு முதலியவற்றிற்கு கேடுதி உண்டாகாமல் காக்கவேண்டும் என்று இஷ்டமான தெய்வங்களைக் குறித்துச் செய்யப்படும் துதியும் "கவசம்" என்று கூறப்படும். இஷ்டமான தெய்வத்தின் குணங்களையும் செய்கைகளையும் சிறப்பாகக் கூறி அது தன்னுடைய இன்ன இன்ன அவயவங்களைக் காக்கவேண்டும் என்று கூறுவதாக அமைந்திருக்கும். ஆதீன நூல்நிலையத்தில் இருக்கும் திருபுவன ஸ்தலபுராணத்திலிருந்து இந்த பில்வ கவசம் வெளியிடப்படுகிறது. விருக்ஷங்களையும் தெய்வமாகவழிபடும் பழக்கம்நமக்கு உண்டு. ஆதலாலும், இதுவரையில் இக்கவசம் அச்சிடப்படவில்லையாதலாலும் இது வெளியிடப்பட்டது.

**அஷ்டகம் :**

அஷ்டகம் என்பது எட்டு ஒரேவகையான சுலோகங்களால் ஆன துதி. கடைசியில் பல சுருதியும் இருக்கலாம். திருபுவன ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சரபமூர்த்தியைப் பற்றிய இந்த அஷ்டகம் ஆகாசபைரவகல்பம் என்ற நூலில் இருந்து எடுத்து எழுதப்பட்டது.

# "மறத்திற்கும் அஃதே துணை"

திரு. மா. அமிர்தலிங்கம்.

திருக்குறளில், "மறத்திற்குமஃதே(அன்பே) துணை" என்ற தொடரைக் கண்ட சில உரையாசிரியர்கள் மறத்தை (பாவத்தை) நீக்குதற்கு என்று கருதினர். வேறு சிலர் அதனை வீரம் உண்டாவதற்குத் துணை என்று விரும்பிக் கொண்டனர். மறம் என்ற சொல் வீரம் என்றும் பாவம் என்றும் பொருள் படும். நம் சிந்தனைக்குரிய திருத்தொண்டர் வரலாறு ஒன்று இரண்டாவது உரைக்குத் தெளிவு தருகின்றது.

சிவகாமி யாண்டார் என்னும் சிவனடியார் இறை வழிபாட்டுக்கு மலர் கொணர்ந்தார். மதங்கொண்டு வந்த மன்னனது யானை அதனைப் பறித்துச் சிந்திவிட்டது. அவர் ஆற்ருது அரற்றினர். தொண்டர்க்குத் தொண்டராம் எறிபத்தர் தவறிழைத்த யானையையும், அதனை விலக்காத பாகர் ஐவரையும் வெட்டி வீழ்த்தினர். என்ன கொடுமை என்று எண்ணத் தோன்றும். வேந்தனும் அப்படித்தான் வெகுண்டு படைதிரள வந்தான். கொன்றவர் எறிபத்தர் என்றவுடன் இறைவனுக்கு அடியராம் குணத்தின் மிக்கார் இத்தனை முனிய நேர்ந்ததே என்று வருந்தினுன். கணப்பொழுதும் வெகுளி பேணுத குணமென்னும் குன்றேறி நின்ருர், ஆறு கொலை செய்யும் அளவுக்கு ஆருத சினங்கொண்டாரென்ருல் எத்துணைப்பெரிய பிழை நிகழ்ந்திருக்க வேண்டும் என்று கணக்கிட்டான். அடியவரை அணுகி, நிகழ்ந்த பிழைக்குத் தண்டனை போதுமோ எனத் தாழ்ந்து வினவினுன், நிகழ்ந்தது சிவ வழிபாட்டுக்குத் தீங்கு என்ற போது, யானையும் பாகரும் மட்டுமல்ல யானும் தவறுடையேன்; என்னையும் கொல்க என்று உடைவாள் தந்தான்.

அரசனது அன்பின் திறங்கண்ட அடியவர் அவன் அன்பின் மிகுதியால் தன்னைத்தானே மாய்த்துக் கொள்வானே என்று அஞ்சியே வாளை வாங்கிக்கொண்டார். வேந்தனே அடியவர் தன்னைக்கொன்று வினையொழிவு தரப்போவதாக எண்ணி

மகிழ்ந்து விட்டான். எறிபத்தர் வேந்தனைக் கொல்லப்போவ தில்லை. கொல்ல நினைக்கவே இல்லை. இருந்தும் அவர் கொல்லப்போவதாகப் பிறர் எண்ண இடம் ஏற்பட்டுவிட்டதே. இந்த எண்ணத்தால் அப்பண்பட்ட நெஞ்சம் புண்பட்டது. தினைத்துணையும் பழிபொறுத தம்மையே மாய்த்துக்கொள்ள முனைந்தார்.

அடுத்து நிகழ்ந்தவை அற்புதங்கள். அற்புதம் நிகழக் காரணமான பண்புகள் அன்றோ நம் உளத்தமைத்துக் கொள்ள வேண்டுவது. அன்பரைக் கொல்லப்போவதாகப் பிறர் நினைக்க நேர்ந்தமை பொறுத நெஞ்சம் ஆறு உயிர்களைக் கொல்ல எப்படித் துணிந்ததோ? அது சிவபிரானிடத்தும் சிவனடியா ரிடத்தும் கொண்ட பேரன்பின் செயலல்லவா? அப் பேரன்பு தானே அவரை ஐவராலும் அடக்க ஒண்ணு மதயானையின் முன் துணிந்து செல்லவும், அப் பட்டத்து யானையைப் பாகரோடு விழ்த்தவும் செய்தது. சேக்கிழாரடிகளும் அதனை, "தாய்தலை அன்பு" என்றே சிறப்பித்தார்.

எறிபத்தரது இத்திருத்தொண்டினை உளங்கொண்டால், மறத்திற்கும் அன்பே துணை என்பது தெளிவன்றோ?

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 1 — 50 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்க ளது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவரு கிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள்

"குமரகுருபரன்" ஆபீஸ் ஸ்ரீவைகுண்டம்.

# இயற்கையன்னை காட்டும் இறைவழிபாடு

திரு. வ. குகசர்மா

உலகம், அதிலே காணப்படும் தோற்றங்கள் யாவும் மாயை என்பர் பெரியோர். ஆனால் இப்பிரபஞ்சத் தோற்றமே ஆன்மாக்கள் இறைவனை அடைய வழிகாட்டும் துணைக்கருவிகளாகும். இதைக் கருதியே, "விடிவாமளவும் விளக்கனைய மாயை" என்றார் திருவருட்பயன் ஆசிரியர். பிரபஞ்சம் கூறும் அற்புதச் செய்திகள் சாதாரண அறிவுள்ள மக்களால் விளங்கிக் கொள்ளல் அரியவாகும். புலவர்களும், இறைவனது அருள் தன்மை கைவரப் பெற்றவர்களும் இச் செய்திகளைத் தம் மனோநிலைக்கேற்ப எடுத்துக் கூறியுள்ளார்கள். ஆன்மாக்கள் தமக்குப் பற்றுக்கோடாக உள்ள இறைவனைப் பலவித நிலைகளில் நின்று வணங்குதல் போல, பிரபஞ்சமும் இறைவனைப் பல நிலைகளில் வணங்குகின்றது என்னும் கருத்தைக் கற்பனை மூலம் காண்பது மனதிற்கு இன்பத்தையும், அதேசமயம் இறை சிந்தனையையும் அளிக்கும்.

## 1. கண்ணப்பரும் முகிலும் :

நீரைத் தம்முள்ளே முகந்து கருக்கொண்ட மேகங்கள் கருநிறம் உடையனவாகக் காட்சியளிக்கின்றன. அவை காஞ்சிபுரத்திலேயுள்ள நந்திமலையை நோக்கி வருகின்றன. வானவில்லைத் தம்மிடத்தே கொண்டனவாக விளங்குகின்றன. நந்திமலைமீது வந்து மழையைப் பொழிகின்றன. இதைப் பார்த்தார் ஒரு புலவர். பார்த்துக்கொண்டே நின்றார். அவர் ஓர் சிவனடியார். அவரது கண்ணில் நந்திமலைமறைந்து சிவலிங்கம் தோன்றியது. முகில்களின் இடத்திலே "மாநதி நன்னீர் தூய வாயினிற் கொண்டு தனுவொருகையில் வெய்யசரத்துடன்தாங்கி" திருக்காளத்தி மலையிலே சிவலிங்கரூபத்துடன் வீற்றிருக்கும் இறைவனை ஆவலுடன் கிட்டிச் செல்லும் கண்ணப்ப நாயனார் தோற்றினார். முகிலின் கறுப்பு நிறமும், வானவில்லும் இத் தோற்றத்தை உண்டாக்கின. கண்ணப்பர் இறைவனைக் கிட்டி வந்தவுடன் என்ன செய்தார்; முன்பே வேதியரால் சாத்தப்பட்டிருந்த மலர்களைக் காற் செருப்பினால் மாற்றிவிட்டார். வாயில் உள்ள நீரால் இறைவனைத் திருமஞ்சனமாட்டினார். இக் காட்சியைச் சேக்கிழார்,

"வாயில் மஞ்சன நீர் தன்னை
விளேத்த அன் புமிழ்வார் போல
விமலனர் முடிமேல் விட்டார்"

என்று அழகாக எடுத்துக்கூறுகிருர். இப்புனிதக் காட்சியைக் காண்கிருர் புலவர் கச்சியப்ப சிவாசாரியர்.

"பூட்டு கார்முகம் தன்னெடும் தோன்றிய புயல்வா
யூட்டு தன்புன னந்தியங் கிரிமிசை யுகுத்தல்
வேட்டு வக்குலத் திண்ணனர் மஞ்சனம் விமலற்
காட்டு கின்றதோர் தனிச்செயல் போன்றுள தன்றே"

2. குவளே பூத்தது:

காஞ்சிபுரத்திலே பல குளங்கள். அவை யாவும் உயர்த்திக் கட்டப்பெற்ற கரையையுடையன. கரையில்லாதகுளம், அரச னில்லா நாடு போன்றது. எனவே கரை உயர்ந்து நீரை வெளியில் சிந்தாமல் பாதுகாத்தல் குளத்திற்கு ஓர் அழகு. தாமரை, குவளே, முதலிய நீர்ப்பூக்கள் நிறைந்திருத்தலும் தடா கத்திற்கு ஓர் சிறப்பு. காஞ்சிபுரத்திலே கரை உள்ள தடாகங் களிலே செங்குவளே மலர்கள் பூத்திருக்கின்றன. அக் காட்சி யைப் பார்த்தார் கச்சியப்பர். குவளேமலர்கள் அக்கினி எரிகின்ற தன்மைபோல் இருக்கின்றன. நீரும், அக்கினியும் ஒன்றற் கொன்று மாருன தன்மையுடையன.

நீர் அக்கினியை அழித்துவிடும் தன்மையுடையது. நீரின் மேல் நெருப்பா? இவ்வாறு புலவர் மனம் சிந்தித்தது. ஏன் இருக்கக்கூடாது? இந்த வித்தையைச் செய்து காட்டிய ஒருவர் நம் சைவ மரபில் இருக்கிருரே! நமிநந்தி அடிகள் ஒருநாள் திருவாரூரில் உள்ள இறைவனலயத்திற்கு விளக்கிட நெய்யில் லாமையால் ஒரு வீட்டில் சென்று நெய் கேட்டார். அது சமணர் "வீடு. ஓர் கையில் அக்கினியை வைத்திருக்கும் சிவ னுக்கு விளக்கெதற்கு" என்று அவர்கள் பரிகசித்தார்கள். "நெய்யில்லே; நீரைவிட்டு விளக்கெரியும்" என்று அடிகள் மனம் நோவச் சொன்னர்கள். நமிநந்தி அடிகள் இறைவனிடம் முறையிட்டார். இறைவன் அருள்பாலித்தார். நீரையே நெய் யாகப் பெய்து திருவாரூர் அப்பனுக்குத் திருவிளக்கிட்டார் அடிகள். இவ்வாறு ஏற்பட்டதன் சிந்தனேயைப் பாட்டாக்கி விட்டார் புலவர்.

" பாட்டிய லளிமுரல் பதுமக் கோயிலில்
நாட்டிய நிமலன்மு னந்தி நீரிடை
மாட்டிய பல்பெருஞ் சுடரை மானுமாற்
கோட்டுயர் தடந்தொறுங் குவளை பூத்தவே "

3. மரங்களும் ஆகுதி வேட்கும்:

பன்னிரண்டு பெயர்ச் சிறப்புடையது சீர்காழி. அங்கே ஓர் தடாகம். அதில் தாமரை மலர்கள் மலர்ந்துள்ளன. அத்தடாகத்தின் பக்கத்திலே பல மாமரங்கள். மாமரங்களின் கிளைகள் தடாகத்தின் மேலும் வளர்ந்து செல்லுகின்றன. இனிய மாம் பழங்கள் கனிந்து அதனின்றும் தேன் பெருகி மாவிலைகளின் வழியாக அதன் நுனிப்பாகத்தால் தாமரை மலர்களின்மேல் விழுகின்றன. இக் காட்சியைக் கண்ட சேக்கிழார், "மக்களைப்போல மரங்களும் அக்கினியில் ஆகுதி செய்து இறைவனை வழிபடுகின்றன" எனக் கூறுகிறார்.

" பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரநீ ளிலைக்கடையா லொழுகுதலா னெடிதவ்வூர்
மரங்களுமா குதிவேட்கும் தகையவென மணந்துளதால் "

4. கோடித்தம்பம்:

வயல்களில் கமுக மரங்கள் உயர்ந்து வளர்ந்து நிற்கின்றன' அந்தக் கமுக மரங்களைப் பசிய கொடிகள் சுற்றியுள்ளன. கொடிகளின் புறத்தே உள்ள நெற்பயிர்கள் சிக்குண்டு கொடிகளுடன் சேர்ந்து கமுகுடன் சுற்றியிருக்கின்றன. கமுக மரங்கள் ஆலவாய் ஆலயத்துள் உள்ள கொடிமரம் போன்று காட்சியளிக்கின்றன. கொடியேற்று விழாவின்போது கொடிமரத்துடன் தருப்பைகளைக் கயிற்றால் சேர்த்துக் கட்டுவார்கள். கமுக மரத்தோடு சேர்க்கப்பட்ட பயிர் கொடிமரத்தோடு சேர்க்கப்பட்ட தருப்பையைப் போலவும், அப்பயிரைச் சுற்றிக்கொண்டு கமுக மரத்தின்மேல் படர்ந்த கொடி, தருப்பையைச் சுற்றிக்கொண்டு கொடிமரத்தில் ஏறுகின்ற கொடிச்சீலையின் கயிறு போலவும் காட்சியளிக்கின்றன. இந்த இயற்கைக் காட்சியே ஆலவாய் அரனுடைய ஆலயக் காட்சியை நினைவூட்டி, எம்மனதை இறை வழிபாட்டிற் செலுத்துகிறது.

" ஒல்லொலிக் கதிர்ச் சாலிகள் புறந்தழீஇ யோங்க
மெல்லிலைப் பசுங் கொடியினால் வீக்குறு பூகம்
அல்லெனுங்களத் தண்ணல்தன் அணிவிழாத் தருப்பைப்
புல்லொடும் பிணிப்புண்டபொற் கொடிமரம் போலும் "

என்பது பரஞ்சோதி முனிவர் வாக்கு.

# செய்திகள்

## திருக்கயிலாய தரிசன நினைவு விழா.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25-ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானம் அவர்கள் செய்தருளிய திருக்கயிலாய தரிசன நினைவு விழா (27—7—65) அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் திருக்கயிலாயத் திருவுருவப்படத்திற்குச் சிறப்புவழிபாடு நிகழ்த்தப் பெற்றது. நண்பகல் மாகேஸ்வர பூஜையும் இரவு திருவீதியுலாவும் நிகழ்ந்தன. திருக்கயிலாய நிலையத்தில் பூர்ணகும்பம் வைக்கப்பெற்று சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது.

மின் விளக்குகளால் ஒப்பனை செய்யப்பெற்ற வெள்ளியிரதத்தில் திருவீதியுலா நிகழ்ந்தது. திருவீதியுலாவின் போது ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானம் அவர்களும் உடன் எழுந்தருளினார்கள். பண்ணிசை வாணர்களின் திருமுறைப்பாராயணம் தக்க பக்கவாத்தியங்களுடன் நடைபெற்றது. மாலை 6 மணி அளவில் ஸ்ரீ சொக்கநாதர் பூஜை மடாலயத்தில் அறிஞர்களின் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அன்பர்கள் வந்து வழிபட்டுய்ந்தனர்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா.

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் 4—8—65 அன்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. அன்று சமயாசாரியர்கட்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. இரவு வெள்ளை யானை வாகனத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் குதிரை வாகனத்தில் சேரமான் பெருமாள் நாயனாரும் திருவீதியுலாவாக எழுந்தருளுவிக்கப்பெற்றனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பண்ணிசைவாணர்

களின் திருமுறைப் பாராயணத்துடன் திருவீதியுலா நிகழ்ந்தது இடையிடையே சுந்தரமூர்த்தி சுவாமிகள் அற்புத விளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன.

## ஏகதின லக்ஷார்ச்சனை

தருமையாதீனத்தில் திருக்கோயில்கொண்டு அருள் வழங்கும் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி திருக்கோயிலில் ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு ஆடி மாத வெள்ளிக்கிழமைகளில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனைகளும் நடைபெறுகின்றன. 6—8—65 வெள்ளிக்கிழமை ஏகதினலக்ஷார்ச்சனை நடைபெற்றது லக்ஷார்ச்சனை காலையில் தொடங்கப்பெற்று இரவு பூர்த்தியாயிற்று. அன்று இரவு சந்தனக்காப்பு அலங்காரம் செய்யப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து வழிபட்டுய்ந்தனர்.

## ஆதீனத் திருக்கோயில்களில் ஆடிப்பூர விழா.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம் ஆகிய திருக்கோயில்களில் ஆடிப்பூரத் திருவிழா 22—7—65 வியாழக்கிழமை முதல் தொடங்கி 31—7—65 சனிக்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சிகள் முதலியன சிறப்பாக நடைபெற்றன. அன்பர்கள் வழிபட்டு உய்ந்தனர்.

**திருவாமூரில்:**

## ஆடிமாத முதல் சதய விழா

அப்பர்சுவாமிகள் (திருநாவுக்கரசர்) அவதாரத்தலமாகிய திருவாமூரில் 17·7·65 சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஸ்ரீ அப்பர் சுவாமிகட்கும், ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ பசுபதீஸ்

வரருக்கும், திலகவதியார், புகழனூர், மாதினியாருக்கும் வீரப் பெருமாநல்லூர், திரு. B. A., இராமமூர்த்தி செட்டியார் உபயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அன்று மாலை 5-மணிக்கு அப்பர் ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஆலயங்களில் உழவாரப்பணியும், கூட்டு வழிபாடும் சிறப்பாக நடைபெற்றன. அப்பருக்குச் சோடசோபசார தீபாராதனை நடைபெற்றது. ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சிதம்பரம், வித்துவான். ச. சேதுசுப்பிரமணிய பிள்ளையவர்கள் ' அப்பர் தேவாரம்" என்பதுபற்றி அரிய விரிவுரை நிகழ்த்தினார்கள். மணம்வந்தபுத்தூர், திரு. M. அசுவத்தராம செட்டியார் ரூ. 250 செலவில் வெள்ளியில் அப்பர் ஆலயத்திற்கு அபிஷேக கலசம் செய்து வைப்பதாகப் பிரார்த்தனை செய்து கொண்டார்கள். உள்ளூர் வெளியூர்களிலிருந்து 500 க்கு மேற்பட்ட அன்பர்கள் வந்து வழிபட்டுப் பயன்பெற்றனர்.

## ஆடிமாத இரண்டாவது சதய விழா

அப்பர் அவதாரத் தலமாகிய திருவாமூர் அப்பர் சுவாமிகள் ஆலயத்தில் 14—8—65 சனிக்கிழமை ஆடிமாத இரண்டாவது சதய விழா மணம்வந்தபுத்தூர், திரு. M அசுவத்தராம செட்டியார் உபயத்தில் அபிஷேக ஆராதனையுடன் சிறப்பாக நடைபெறும்.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானச் சார்பில் நடைபெற்றுவரும் ஸ்ரீ ஐயாறப்பர் வாரவழிபாட்டுக் கழகத்தினர் அறுபதுபேர் ஷை ஆலயக் கட்டளை விசாரணை ஸ்ரீமத் விசுவலிங்கத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் திருப்பனந்தாள், திருவதிகை தரிசித்துக்கொண்டு மதியம் 12-30க்குத் திருவாமூர் வந்து வழிபடுவர், மாலையில் நடைபெறும் உழவாரப் பணியிலும், கூட்டு வழிபாட்டிலும் பங்கு கொள்வர். அன்று மாலை 3 மணிக்கு ஸ்ரீ சுந்தரர் அவதாரத் தலமாகிய திருநாவலூரில் வழிபாடு நிகழ்த்துவர். இரவு 10 மணிக்குச் சிதம்பரத்தில் அர்த்தசாம தரிசனம் செய்வர்.

## ஆதீனத் திருக்கோயில்களுக்கு சென்னை மாநில ஆளுநர் அவர்களின் வருகை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கும், உத்தர மாயூரம் வள்ளலார்கோயில் ஸ்ரீவதான்யேசுவர சுவாமி தேவஸ்தானத்திற்கும் சென்னை மாநில ஆளுநர் கனம். திரு. ஜெயசாமராஜ உடையார் அவர்கள் வருகை புரிந்தார்கள். இவ்விரு திருக்கோயில்களுக்கும் தரிசனத்திற்கு வருவதற்கு முன்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் திருமுன்பிற்குக் காணிக்கை அனுப்பியிருந்தார்கள்.

திருபுவனம் திருக்கோயில் சோழ அரசர்களின் சமயப்பணியையும், கலையதிவையும் விளக்கி நிற்பது. இத்திருக்கோயிலில் உள்ள அழகிய சிற்பங்கள் காண்போர் கருத்தைக் கவர்வனவாயுள்ளன. இங்கு ஸ்ரீ சரப மூர்த்தி மிக்க விசேஷமானது. பல குடும்பங்களுக்குக் குலதெய்வமாய் விளங்குவது. வள்ளலார் கோயிலில், காவிரியில் உள்ள இடப தீர்த்தத்தை நோக்கிய வண்ணம் இருந்து திருநந்திதேவர்க்கு ஞானோபதேசம் புரியும் நிலையில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி அருள் வழங்குவது சிறப்புடையது.

இவ்விரு திருக்கோயில்களிலும் கனம் ஆளுநர் அவர்களின் வருகையை முன்னிட்டு வழிபாட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகள் சிறந்த முறையில் செய்யப்பெற்றிருந்தன. திருக்கோயில்களின் திருமுன்னர் முகப்பு வேலைப்பாடுகளுடனும் தோரணம் முதலியவற்றுடனும் அழகிய பந்தல் அமைக்கப்பெற்றிருந்தது. திருபுவனம் திருக்கோயிலில் வித்துவான் ஸ்ரீமத்சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும் வள்ளலார்கோயிலில் வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் ஆதீன உயர் அதிகாரிகளும் ஆலய நிர்வாகிகளும் பூர்ண கும்பம் முதலிய கோயில் மரியாதைகள் செய்து நாதஸ்வர இன்னிசை முழக்கத்துடன் வரவேற்றனர். பின்னர் இருதிருக்கோயில்களிலும் சந்நிதிகள் தோறும் தரிசனம் செய்து வைத்து, பொன்னாடை போர்த்தி மரியாதைகள் செய்யப்பட்டன. கனம் ஆளுநர் அவர்கட்கு ஸ்ரீ சரபர் சந்நிதியில், கேடயம் போன்ற வடிவில் அமைக்கப்பட்ட சரபர் திருவுருவம் வழங்கப்பட்டது. வள்ளலார் கோயிலில் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்பிரமணியர் பூஜை எழுந்தருளுவிக்கப்பெற்றது. கனம் ஆளுநர் அவர்கள் தமது தாயார் மனைவி முதலியவர்களுடன் வந்து தரிசனம் செய்து மகிழ்ந்தார்கள்.

## சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின்

சைதாப்பேட்டையில் :

### ஜூன் மாத மாதாந்திர வழிபாடு

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 22—7—65 ஞாயிறு மாலை 5-30 மணியளவில் சைதாப்பேட்டைப் பிராமணத் தெருவில் உள்ள ஸ்ரீ சவுந்தரேசர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. குழுவினர் சார்பில் சுவாமி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனை செய்யப்பெற்றது. வழிபாட்டின் முடிவில் திரு என், ஆர், முருகவேள் எம். ஏ.. எம் ஓ. எல். திருக்கோயில் சிறப்பும் வழிபாட்டுச் சிறப்பும் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன் தேவாரத் திருமுறை ஓதிச் சிறப்பித்தார் குழுவினர் அனைவரும் திருமுறை ஓதி முறையாக வழிபாடு நிகழ்த்தினர். அவ்வாலய மூர்த்திகட்கு ஆடை வாங்குவதற்காகக் குழுவினர் ரூ. 32/- நன்கொடை அளித்தனர். அறங்காவலர் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும், பிரசாரத்தையும் உடனிருந்து நடத்திக் கொடுத்தார்கள்.

மாங்காட்டில் :

### ஜூலை மாத மாதாந்தர வழிபாடு

நிலைய மன்றத்தின் ஜூலை மாத மாதாந்திர வழிபாடு 25—7—65 ஞாயிறு மாலை 4 மணி அளவில் மாங்காடு ஸ்ரீபார்க்கவரேசுவரர் ஆலயத்திலும், ஸ்ரீதபஸ்காமாக்ஷி அம்மன் ஆலயத்திலும் சிறப்பாக நடைபெற்றது. ஈஸ்வரருக்கும் அம்மைக்கும் குழுவினர் சார்பில் அபிஷேக ஆராதனை நடத்தப்பெற்றது. சிவபுராணம், திருஅங்கமாலை ஓதி வலம் வந்து முறையாக வழிபாடியற்றினர். நாமாவளி பஜனையுடன் திருவீதி வழியாக அம்பாள் ஆலயத்திற்குச் சென்று அபிராமி அந்தாதி ஓதி வழிபாடு நிகழ்த்தினர். அறங்காவலர் மணலி திரு எஸ். இராமகிருஷ்ண முதலியார் சார்பில் அவரது ஏஜெண்ட் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும், சமயப் பிரசாரத்தையும் உடன்

இருந்து நடத்தி வைத்தனர். வழிபாட்டின் நிறைவில், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் திரு என். ஆர். முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். திரு கே. கமலக்கண்ணன். எம். எல். சி. ஆகியோர் மாங்காட்டின் சிறப்பு, காமாக்ஷி அம்மையின் சிறப்பு, கோவிலைப் பாதுகாக்க வேண்டிய முக்கியத்துவம் பற்றி விரிவுரையாற்றினார்கள். தருமபுரம். திரு பி. சுவாமிநாதன் தேவாரத் திருமுறை ஓதி மகிழ்வித்தார்.

## வேலூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும்விழா

26—6—65 சனிக்கிழமை நடைபெற்ற வேலூர்க்கிருத்திகை விழாவில் நிலைய அன்பர்கள் சார்பில் அபிஷேக ஆராதனை செய்வித்த பிரசாதமும், சந்தனக்குழம்புப் பிரசாதமும், 28-6-65 மாலை 7 மணிக்கு நிலைய மன்றத்தில் திரு கே. இ. அருணாசலம் முதலியார் எம். ஏ. பி. காம். அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கும், உறுப்பினர்கட்கும் வழங்கப்பட்டன. வித்துவான் திரு. ந. இராமலிங்கம் பிரார்த்தனை நிகழ்த்தினார்.

23—7—65 வெள்ளிக்கிழமை நடைபெற்ற கிருத்திகையன்று நிலைய அன்பர்கள் சார்பில் வேலூரில் நடைபெற்ற அபிஷேக அர்ச்சனைப் பிரசாதங்கள் 24—7—65 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு நிலைய மன்றத்தில் டாக்டர். திரு எஸ். ஞானதேசிகம் பிள்ளை எம். பி. பி. எஸ். அவர்கள் தலைமையில் பிரார்த்தனை நிகழ்த்தி வழங்கப்பெற்றன. தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினார். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள்.

## ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை விழா.

நமது நிலைய மன்றத்தில் 4—8—65 மாலை 7 மணியளவில் திரு. K. E. அருணாசல முதலியார் M. A., B. Com., அவர்கள் தலைமையில் சுந்தரமூர்த்திசுவாமிகள் குருபூசை விழாச்சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. திருவாசகமணி, திரு. K. M. பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள் சுந்தரர் தேவாரம் என்பதுபற்றி அரியதொரு விரிவுரை நிகழ்த்திச் சிறப்பித்தார்கள். வித்துவான். திரு. ந. இராமலிங்கம் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினார்.

# எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(விசுவாவசுஹூ ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—8—65 முதல் 16—9—65 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுப பலனைத்தரும். சுபசோபனுதி காரியங்களாலும் அடிக்கடி சஞ்சார பலத்தாலும் அதிக செலவினங்கள் ஏற்படும். புண்ணிய தீர்த்தாடனம் தூர பிரயாணம் நூதன பிரதிஷ்டா பலன்கள் இவைகளையும் கொடுக்கும். எதிர்பாராமல் தனதான்ய விருத்தியைக் கொடுத்து ஆரோக்யத்தையும் தரும். இல்லறம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½

விருஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலன்களைத்தரும். வரவு செலவு சமமாகும். நூதன ஜீவன லாபத்தையும் இடம் மாறுதலேயும் தரும். மேலோர் பெரியோர்களின் அன்பினுல் சகலமும் சாத்தியமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்களும் திருவாதிரை 1, 2 பாதமும் சுபத்தைத்தரும். நூதன வஸ்திராபணச் சேர்க்கையும், உத்தியோக லாபமும் கிரகசுகமும் ஓங்கும். திருவாதிரை 3, 4 பாதமும் புனர்பூசம் 1. 2, 3 பாதங்களும் அதிக சிரம பலன்களை உண்டுபண்ணும். நஷ்ட கஷ்டங்கள் அதிகமாகும். சுக பங்க

மும் ஆரோக்யக் குறைவும் காட்டும். ஞாயிறு, செவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

புனர்பூசம் நான்காம் பாதம் சுபத்தைத்தரும். குடும்பம் ஓங்கும். வித்தியாவிருத்தியாகும். பூசம் நான்கு பாதங்களும் ஆயில்யம் நான்கு பாதங்களும் மிகுந்த கவலைகளையும் சிரமங்களையும் கொடுத்து கடைசியில் தெய்வபலத்தால் சகலமும் சாத்யமாகும். நஷ்டமான தனங்களும் வந்துசேரும். குடும்பம் ஓங்கும். சுபசோபனுதிகள் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் உத்தியோகத்தில் மேல் பதவிகளைத் தரும். ஆரோக்யமும் சந்தோஷமும் உண்டுபண்ணும் மேலோர் பெரியோர்களின் அன்பால் சகல காரியமும் சித்தியாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் களத்திர புத்திர மித்திராதிகளுடனும் பந்துவர்க்கங்களுடனும் நெருங்கிய பலனைக்கொடுத்து சந்தோஷத்தை உண்டுபண்ணும். சாச்வதமான இஷ்டார்த்த சித்திகளையும் பிரதிஷ்டா பலன்களையும் தந்து உலக பிரசித்தியையும் தரும். சகல காரியங்களும் ஆரம்பத்தில் விக்னத்தையும் கவலையையும் காட்டிப் பிறகு தெய்வ பலத்தால் சகலமும் பூர்த்தியடையச் செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, - சுவாதி - விசாகம் ¾.

துலாராசி 9 பாதங்களும் பூர்வபுண்ணிய பலத்தால் தெய்வசக்தி ஓங்கி எங்கும் பிரசித்தியை உண்டுபண்ணும். சகல காரி

யங்களும் சுலப சாத்தியமாகும். களத்திர புத்திர மித்திரபிருத்யாதிகளுடன் இல்லறசுகம் ஓங்கச்செய்யும். சனி, ஞாயிறு சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$-அனுஷம்-கேட்டை

விசாகம் நான்காம் பாதமும் அனுஷம் 4 பாதங்களும் சுபமிராது. ஆரோக்யக் குறைவையும் நஷ்டங்களையும் விரோதங்களையும் உண்டுபண்ணும். கேட்டை 4 பாதங்களும் சந்தோஷத்தைத்தரும். குடும்பம் ஓங்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். திங்கள், புதன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் சுப சோபனுதிகளைத் தரும். தொழில் ஓங்கும். புத்திராதிகளால் சுகம் உண்டுபண்ணும். தெய்வபலம் முன்னின்று சகலத்தையும் காக்கும். புதன். வியாழன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்ட

மகரராசி 9 பாதங்களும் அதிகமான உழைப்பைத்தந்து விசேஷமான லாபத்தையும் தரும். குடும்பசுகம் ஓங்கும். பந்துமித்திராதிகளால் விசேஷ உபகாரத்தையும் உண்டுபண்ணும், மனம் சாந்தியடையும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் இடம் மாறுதலோடு சுகத்தைத் தரும். கிரக பூமிகளால் விசேஷ லாபத்தையும் சுகத்தையும் தரும். குடும்பம் அமைதியாய் சந்தோஷகரத்தோடு நடக்கச் செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் தெய்வீகத்தன்மையோடு பிரகாசிக்கும். மேலோர் பெரியோர் சாதுக்களுடைய அன்பு கிடைக்கச் செய்யும். வெகுகாலம் எதிர்பார்த்து நடவாத காரியங்கள் எல்லாம் சுலபசாத்தியமாகும். அடிக்கடி சஞ்சாரங்கள் ஏற்படச்செய்யும். ராஜாங்க மூலத்தாலும் வியாபார மூலத்தாலும் ஜீவனம் ஓங்கும். மனம் சாந்தியடையும். செவ்வாய், புதன் சுபமாகும்,

குறிப்பு :- மேற்படி மாதம் உலக சுபிக்ஷத்திற்கான விஷயங்களைப்பற்றி அதிகம் எழுதுவதற்கில்லை. தர்ம பூமிகளும் தர்மிஷ்டர்களும் மாத்திரம் தெய்வசக்தியால் காப்பாற்றப்படுவர் கீழோர்முதல் மேலோர்வரை அவரவர்களின் தன்மையை உணர்ந்து கொண்டு சாந்தமாய் நடந்துகொள்ள சகலமும் சுபமாகும். ஸ்ரீ சர்வேஸ்வரன் அருள் புரிவாராக. உலகெங்கும் சுபிக்ஷம் ஏற்பட்டு பிரஜைகள் சந்தோஷம் அடையுமாறு ஸ்ரீ சர்வேஸ்வரனை சதா பிரார்த்தித்துக்கொள்ளவேண்டும்.

---


### "ஞானசம்பந்தம்"

சமய விளக்கத் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 2—25. வெளிநாடு ரூ. 3—00.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்.
தருமையாதீனம். மாயூரம் அஞ்சல்.
தஞ்சை மாவட்டம்.

உ

குருபாதம

# தருமையாதீனம் திருஞானசம்பந்தர் ஆலயம்

## திருநெல்வேலி சந்திப்பு.

ஞாயிறுதோறும் மாலை 6-30 மணி முதல் சொற்பொழிவு

22—8—65 செருத்துணை நாயனார்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

,, ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகர்

— திரு. ம. சிவசம்பு

29—8—65 அதிபத்த நாயனார்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

,, சிகாரத்னமாலை

— திரு. ம. சிவசம்பு

5—9—65 இளையாங்குடிமாற நாயனார்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

,, மண்சுமந்த திருவிளையாடல்

— திரு. ம. சிவசம்பு

12—9—65 குலச்சிறை நாயனார்

— திரு. வ. ச. நடராசபிள்ளை

,, கந்தபுராணச் சுருக்கம்

— திரு. ம. சிவசம்பு

வந்து கேட்டு இன்புறுக !

நெல்லை அருணகிரி இசைக் கழகம், }

இராம. கனகசபாபதி,
அமைச்சர்.

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கு
சென்னை இந்துசமய அறநிலையத்துறையினர்
தூய்மைப்பரிசாக அளிக்கும் சுழற்கோப்பை வழங்கும் விழா



தஞ்சைத் துணை ஆணையர்,
திரு. A. மார்க்கண்டவேல்ராஜன் அவர்கள்
சுழற்கோப்பையை வழங்குதல்.

திருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர்
ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்



சென்னை, இந்துசமய அறநிலையத்துறை ஆணையர், திரு. **M. S.** சாரங்கபாணி முதலியார் **B. A., B. L.,** அவர்கள் தூய்மைப் பரிசாகிய சுழற் கோப்பையைப் பார்வையிடுதல்.



உ

குருபாதம்

### ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வரசுவாமி கோயில்

# மகோற்சவப் பத்திரிகை

பெருங்கருணைத் தடங்கலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ்குறியாம் சிவலிங்கமாதிதிருவுருக்கொண்டுஎழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர். தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி மூதலிய தீர்த்தங்களால் சிறப் புற்றதும், வில்வாரண்யம் என்னும் சிறப்புத் திருநாமம் உற்ற தும், குருபீடஸ்தானமும் ஆகிய தருமபுரத்தின்கண் திருக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு, நிகழும் பராபவ ஆண்டு வைகாசித்திங்கள் 17-வது நாள் (31—5—1966) செவ்வாய்க் தொடங்கி மகோற்சவம் நடைபெறும்.

இந்நாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நடை பெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் இன்புறுக.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

காரியார்

**சொக்கநாதத் தம்பிரான்.**

தருமையாதீன
மடாலயம்
பராபவ வைகாசி

---

ஆதீன மடாலய திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில் நாள்தோறும் மாலை 6-மணிமுதல் மாநாட்டு நிகழ்ச்சிகளும் பூசை மடத்தில் காலை 10 - 30 மணி முதல் சித்தாந்தப் பாட வகுப்பும் நடைபெறும்,

உ

குருபாதம்

# ஆதி பரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டியநாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில், சைவ வேளாளர் மரபில், ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனுட்சியம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுப தினத்தில் தோன்றினர். அவர்தம் பிள்ளைத் திருநாமம் ஞான சம்பந்தர் என்பது. இவர் இளமையிலேயே கல்வியில் குறை வில்லாதுநிரம்பினர். பெற்றோர் தம் ஆன்மார்த்தமூர்த்தி சொக்க லிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் 'உண்மை அம்மை அப்பர் அங்கையற்கண்ணி யும் ஆலவாய் அரனுமே' என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து, மதுரையிலே இருந்தார்.

நாள்தோறும் பொற்ருமரைத் தீர்த்தத்தில் முழுகிக் காலந் தோறும் சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்ருமரைத் தீர்த்தக்கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்யும் அடியார் களது செயலில், ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு மூகிழ்த்தெழுந்தது. ஆலவாய் அப்பனை ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினர். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, முற்பிறப்பில் உன்னுல் பூஜிக்கப் பெற்றுவந்த நாம், பூஜைப்பெட்டகத்துடன் பொற்ருமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திக்கில் இருக்கின்ரேம்; மூழ்கிப் பெறுக, என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்ருமரைத் தீர்த்தத்தில் முழுகி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று, ஆனந்தபரவசம் உற்ருர். பின், சொக்கநாதர் சந்நிதியில் சென்று, பெருமானே, கண்ணுக்கினிய பெருமானும் என் கரத் தில் வந்த உன்னைப் பூஜிக்கும் நெறியை அருள்புரிய வேண்டும் என்று வேண்டினர். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி, 'திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானுேபதேசமும், சிவபூஜையும் பெறுக என்று பணித்தருளி, ஞானப்பிரகாசரது

கனவிலும் சென்று, உன்னிடம் வருகின்ற நம் ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானோபதேசம் செய்து சிவபூஜையும் எழுந்தருளப் பண்ணிவைப்பாயாக' என்று சொல்லி மறைந்தருளினார்.

திருவாரூரில்-சித்தீச்சரத்தில் தென்முகக் கடவுள் திருமுன்பு சீடரின் வருகையைக் குருமூர்த்தி எதிர்நோக்கியிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர் வசமாகி, சிவதீக்ஷையும், சிவபூஜையும் எய்தினார். அவர் நாள்தோறும் சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா; அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒருநாள் ஞானப்பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில் கைவிளக்கெடுப்போன் ஆங்கு இல்லாமை கண்டு ஞானசம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது, 'நிற்க' என்று சொல்லி உட்சென்றார். குருவாணை கடவாத ஞானசம்பந்தர், கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது; ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார்; குருமூர்த்தியும் கேட்டுவந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர்; தனி இடத்தில் இருந்து உம்மை நாடி ஓடி வரும் காரணர்க்கு உண்மை வைத்து சமய பரிபாலனம் புரிக' என்றார். சீடர்,

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ ?
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ ? இணங் கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பரஇன்று
உனக்கிச்சை எப்படி ? அப்படி ஆக உரைத்தருளே"

என்று வேண்டினார். அதுகேட்டுக் குருமூர்த்திகள், 'தருமபுரம் செல்க' எனப்பணித்தருளினார்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞானநூல்கள் பல அருளினார்; ஆனந்தபரவசர் முதலிய பலர்வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச்செய்தருளினார். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதி பரமாசாரிய மூர்த்திகள்.

# திருநாள் விபரம்.

| தமிழ் ஹு மீ உ | இங்கிலீஷ் ஹு மீ உ | வாரம் | திரு நாள் | உற்சவ விபரம் |
|---|---|---|---|---|
| வைகாசி மீ 17 | 30—5—66 | சோமவாரம் | | சித்திரா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 28-45 நாழிகைக்குமேல் 32·30 நாழிகைக்குள் (மாலைமணி 5-30 to இரவு 7 க்குள்) விருச்சிக லக்னத்தில் அனுக்ஞை விக்னேசுவர பூஜை வாஸ்துசாந்தி, மிருத்ஸங்கிரஹணம். அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம். |
| 18 | 31—5—66 | மங்களவாரம் | 1 | சித்திரா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 2-30 நாழிகைக்குமேல் 7-30 நாழிகைக்குள் (காலை மணி 7-க்குமேல் 9·க்குள்) மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வர சுவாமி மஹோத்ஸவ துவஜாரோகணம். |
| 19 | 1—6—66 | புதவாரம் | 2 | கற்பகவிருக்ஷக் காட்சி. |
| 20 | 2—6—66 | குருவாரம் | 3 | பூதம், பூதகி, இடும்ப வாகனக்காட்சி. |

பராபவ ஸ்ரீ

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | 3—6—66 | சுக்கிரவாரம் | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக்காட்சி. |
| 22 | 4—6—66 | ஸ்திரவாரம் | 5 | சகோபுர ரிஷப வாகனக்காட்சி. |
| 23 | 5—6—66 | பானுவாரம் | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக்காட்சி. |
| 24 | 6—6—66 | சோமவாரம் | 7 | மாலை மணி 6 30 க்குமேல் 8-க்குள் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம், புஷ்ப விமானம், வெள்ளிரதக்காட்சி. |
| 25 | 7—6—66 | மங்களவாரம் | 8 | குதிரை, கிளி, யானைவாகனக்காட்சி. |
| 26 | 8—6—66 | புதவாரம் | 9 | காலை மணி 6-30 க்குமேல் 8.0 க்குள் மிதுன லக்னத்தில் மஹாரதாரோஹணம், திருத்தேர் |
| 27 | 9—6—66 | குருவாரம் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல் பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தங் கொடுத்தருளல். இரவு துவஜாவரோஹணம். |
| 28 | 10—6—66 | சுக்ரவாரம் | | மௌன உற்சவம். |
| 29 | 11—6—66 | ஸ்திரவாரம் | | சண்டேசுரர் உற்சவம். |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

## சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்தமாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திறம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவ மாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத்தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

## தருமையாதீனக் குருமுதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்ஙரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும் இரு கடைக்க ணாளன்
பார்புகழும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

(சம்பந்த சரணாலயர்)

உ
குருபாதம்

# சித்தாந்தப் பாட வகுப்பு

**"சிவஞான சித்தியார்"**

**31—5—66 முதல் 10—6—66 முடிய**

**காலை 10-30 மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.**

**நடத்துபவர்:-**

**தருமையாதீனப்புலவர், சித்தாந்தக்கலைமணி.**
**மகாவித்துவான்,**

**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**

*சித்தாந்தப் பேராசிரியர்,*
*தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.*

உ
குருபாதம்

# திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

**ஒவ்வொருநாளும் மாலை 6 மணி முதல் நடைபெறும்.**

**முதல் திருநாள் 31—5—66 செவ்வாய்க்கிழமை**

## தோத்திரத் திருநாள்

**முதல் திருநாள் தத்துவம்**

**தூலதேகத்தை நீக்கிக்கொள்ளும் பயனை விளக்குவதாகும்.**

**கொடியேற்று விழா**

**சிவாலயங்களில் முன்னே உள்ள இடபம் அறவிடை. ஊழிக் காலத்தில் அழிவிற்கு அஞ்சிய அறக்கடவுள் (தருமதேவதை) வெள்விடை உருவங்கொண்டு சிவபெருமானைச் சரண் அடைய,**

அவர் அதனை ஊர்தியாகவும், கொடியாகவும் கொண்டார். அந்த அறக்கொடியைப் பெருவிழாவின் தொடக்கத்தில், தேவர், முனிவர் முதலாகப் பலரும் அறிய உயர்த்துக் கட்டுவதே கொடி ஏற்றம். பஞ்சகிருத்தியங்களுள் கொடியேற்றம் சிருட்டியைக் குறிக்கும்.

வித்துவான், சிரோமணி,
**திரு. வி. சபேசன்**
தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி.

" தேவாரச்சிறப்பு "

**வித்துவான், திருமதி. ப. நீலா**
தமிழ்ப் பேராசிரியை, ஆதீனப் பல்கலைக் கல்லூரி.

" திருவாசகச்சிறப்பு "

இரண்டாந் திருநாள் 1—6—66 புதன்கிழமை

## சாத்திரத் திருநாள்

### இரண்டாந் திருநாள் தத்துவம்

தூலம், சூக்குமம் என்னும் இருவகை யாக்கையையும் நீக்கிக்கொள்ளும் பயனைக் குறிப்பதாகும்.

### கற்பக விருட்சக் காட்சி

வாகன உற்சவங்கள் எல்லா உயிர்களையும் காப்பாற்றுகின்ற திதித் தொழிலைக் குறிக்கும். கற்பகவிருட்சக்காட்சி இந்திராதி போகங்களையும் அருளுபவர் சிவபெருமானே என்பதை விளக்கும்.

தருமையாதீனப் புலவர்,
சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான்,
**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**
தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி.

" சிவஞானபோதம் "

திருநெறிச்செம்மல்,

**வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர்**

பொறுப்பு முதல்வர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி.

" சிவஞானசித்தியார் "

மூன்றாந் திருநாள் 2—6—66 வியாழக்கிழமை

## திருவிளையாடற்புராணத் திருநாள்

### மூன்றாந் திருநாள் தத்துவம்

மூவினையும் முப்புத்தியும், முக்குணமும், மும்மனமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் ஆகிய இவைகளை ஒழித்தற் பொருட்டாகும்.

### பூத வாகனக் காட்சி

பூதம், பஞ்ச பூதங்களையும், உயிர்களையும் குறிக்கும். சிவபெருமான் பூத வாகனத்தின்மேல் எழுந்தருளிவருதல், அவர் தத்துவாதிபதியாயும், உயிர்க்குயிராய் நின்று அவைகளைச் செலுத்துபவராயும் இருத்தலை விளக்கும்.

**விரிவுரை :-**

அமுதமொழிக்கொண்டல், அருள்மொழி அரசு,

**திருமுருக. கிருபானந்தவாரியார்**

சென்னை.

" மீனாக்ஷியம்மை திருமணம் "

நான்காம் திருநாள் 3—6—66 வெள்ளிக்கிழமை

## திருவிளையாடற்புராணத் திருநாள்

### நான்காந் திருநாள் தத்துவம்

நாற்கரணம், நால்வகைத் தோற்றம் என்னும் இவைகளை நீக்குதற் பொருட்டாகும்.

### அதிகார நந்தி சேவை

திருக்கயிலையைக் காவல் பூண்டு நிற்கும் அதிகாரத்தைப் பெற்ற நந்திதேவர், ஸ்ரீகண்ட பரமசிவனிடம் நேரே ஞானோப தேசத்தைப் பெற்று, சகல வர்க்கத்தினர் பலர்க்கும் ஞானாசாரிய மூர்த்தியாய் விளங்குபவர். சிவபெருமான் அதிகார நந்திமீது எழுந்தருளிவந்து காட்சி வழங்குதல், இறைவன் குருமூர்த்தியிட மாக நின்று ஞானத்தை அருளுதலை விளக்கும்.

விரிவுரை :-

அமுதமொழிக்கொண்டல், அருள்மொழி அரசு,

திருமுருக. கிருபானந்தவாரியார்

சென்னை.

" மாணிக்கவாசகர் "

ஐந்தாம் திருநாள் 4—6—66 சனிக்கிழமை

## திருவிளையாடற்புராணத் திருநாள்

### ஐந்தாம் திருநாள் தத்துவம்

புலன்களின் வழியே செல்லும் ஐம் பொறிகளும், பஞ்ச அவத்தைகளும் பஞ்ச மலங்களும் நீங்குதலைக் குறிக்கும்.

### சகோபுர இடபவாகனக் காட்சி

சிவபெருமான் ஏறிவரும் இடபம், போர்விடை, திரிபுரம் எரிக்கச்சென்ற காலத்தில், வைதிகத் தேர் அச்சு முரிந்த பொழுது, திருமால் கொண்ட இடப வடிவமே போர்விடை. திரிபுரத்தவர்களது துன்பம் பொறுக்கமாட்டாது, வாயிலில் நின்று முறையிட்ட தேவர்களுக்குச் சிவபெருமான் தோன்றி அபயம் அளித்ததையே சகோபுர இடபவாகனக் காட்சி விளக்குகிறது.

விரிவுரை :-

அமுதமொழிக்கொண்டல், அருள்மொழி அரசு,

திருமுருக. கிருபானந்தவாரியார்

சென்னை.

" பிட்டுக்கு மண்சுமந்த கருணை "

ஆறாந் திருநாள் 5—6—66 ஞாயிற்றுக்கிழமை

## பெரியபுராணத் திருநாள்

### ஆறாந் திருநாள் தத்துவம்

காமமாதி ஆறும், கலையாதி ஆறும், பதமுத்தி ஆறும், வினைக்குணம் ஆறும் ஒழிதற்பொருட்டு நிகழ்வதாகும்.

### யானை வாகனக் காட்சி

யானையின் வடிவமும், ஒலியும் பிரணவமாகும். பிரணவமே மந்திரங்கட்கெல்லாம் முதலாவது. அதுவே அம்ச மந்திரமும் ஆகும். அம்ச மந்திரத்தைக் குறிக்கும் அன்ன வாகனத்தின் மேல் அம்பிகை உடன்வர சிவபெருமான் யானை வாகனத்தின் மேல் எழுந்தருளிவருவது, பிரணவ மந்திரம் அம்ச மந்திரங்களால் யோகக்காட்சியில் அப்பெருமான் விளங்குவதைக் குறிக்கும்.

விரிவுரை :-

அமுதமொழிக்கொண்டல், அருள்மொழி அரசு,

திருமுருக. கிருபானந்தவாரியார்

சென்னை.

"சுந்தரர்"

ஏழாந் திருநாள் 6—6—66 திங்கட்கிழமை

## பெரியபுராணத் திருநாள்

### ஏழாந் திருநாள் தத்துவம்

எழுவகைப் பிறப்பு, கலையாதிகள் ஏழு மாயாமல குணம் ஏழு என்னும் இவைகளைத் தவிர்த்தற்பொருட்டாகும்.

### திருக்கல்யாண வைபவம்

திருக்கல்யாண மகோற்சவம், உலக சிருட்டியைக் குறிக்கும். உருவம், தொழில், பெயர் ஒன்றுமின்றி நின்ற பரசிவம், உலக

சிருட்டியின் பொருட்டு சிவமும் சத்தியுமாய் இயைந்து நின்று, நாதம், விந்து முதலியனவாகப் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தருளுவர். அவ்வாறு தோற்றுவித்தருளச் சிவமும் சத்தியுமாய்க் கலந்து நிற்கும் நிலையையே திருக்கல்யாண மகோற்சவம் விளக்குகின்றது.

விரிவுரை :-

அமுதமொழிக்கொண்டல், அருள்மொழி அரசு,
திருமுருக. கிருபானந்தவாரியார்
சென்னை.

" அப்பர் "

எட்டாந் திருநாள் 7—6—66 செவ்வாய்க்கிழமை

## பெரியபுராணத் திருநாள்

### எட்டாந் திருநாள் தத்துவம்

தன்வயத்தனுதல் முதலிய கடவுட் குணங்கள் எட்டினையும் விளக்குதற் குறிப்புடையதாகும்.

### குதிரை வாகனக் காட்சி

ஐம்புலன்களை அதிவேகமாகச் சென்று பற்றும் மனம் குதிரை எனப்படும். மனமாகிய குதிரையைப் பிராணனாகிய கடிவாளத்தினால் பிடித்து நிறுத்துவதே வாசியோகம் எனப்படும். வாசி - குதிரை. ஆகவே, சிவபெருமான் குதிரை வாகனத்தின் மேல் எழுந்தருளிவருவது, வாசியோகத்தில் விளங்கும் தியானப் பொருளாதலை விளக்கும்.

விரிவுரை :-

அமுதமொழிக்கொண்டல், அருள்மொழி அரசு,
திருமுருக. கிருபானந்தவாரியார்
சென்னை.

" திருஞானசம்பந்தர் "

ஒன்பதாம் திருநாள் 8—6—66 புதன்கிழமை

## கந்தபுராணத் திருநாள்

### ஒன்பதாம் திருநாள் தத்துவம்

சகளம், நிஷ்களம், சகளநிஷ்களம் என்னும் வடிவம் மூன்றும் சிருஷ்டி முதலிய முத்தொழில்களும் தன்மை முதலிய மூன்றிடத்து இருத்தலுமாகிய ஒன்பதும் இல்லையென்பதைக் குறிப்பதாகும்.

### திருத்தேர் விழா

திருத்தேர் விழா, சிவபெருமான் தேவர்கள் பொருட்டு வைதிகத்தேரின்மேற்சென்று திரிபுர சங்காரம் செய்தருளியதை விளக்கும். ஆகவே, பஞ்ச கிருத்தியங்களுள் இது சங்காரத் தொழிலைக் குறிப்பதாம். இதனால், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல நீக்கமும் பெறப்படும்.

விரிவுரை :-

அமுதமொழிக்கொண்டல், அருள்மொழி அரசு,

திருமுருக. கிருபானந்தவாரியார்

சென்னை.

" முருகவேள் திருஅவதாரம் "

பத்தாம் திருநாள் 9—6—66 வியாழக்கிழமை

## கந்தபுராணத் திருநாள்

### பத்தாம் திருநாள் தத்துவம்

தீர்த்தத் திருவிழா சிவானந்தமாகிய பேரின்பக் கடலில் ஆன்மா திளைப்பதைக் குறிப்பதாகும்.

## தீர்த்தவாரி

ஸ்ரீநடராஜப்பெருமான் பஞ்சகிருத்திய மூர்த்தி, பஞ்ச கிருத்தியத்தில் அநுக்கிரகமே மேலானது. விழாக்காலத்தில் ஒன்பது நாட்களிலும் எழுந்தருளி அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை முற்றுவித்தபின், பத்தாம் நாள் நடராஜ மூர்த்தி எழுந்தருளி வந்து தீர்த்தம் கொடுத்தல், புல் பூடு முதலிய அனைத்துயிர்களையும் ஆனந்த சாகரத்தில் அழுந்தச்செய்வதே யாகும்.

விரிவுரை :-

அமுதமொழிக்கொண்டல், அருள்மொழி அரசு,

திருமுருக. கிருபானந்தவாரியார்

சென்னை.

" சூரபன்மன் பேருவாழ்வு "

பட்டணப்பிரவேசத் திருநாள் 10—6—66 வெள்ளிக்கிழமை

## கந்தபுராணத் திருநாள்

காலை 8-மணிக்கு

## சித்தாந்தப்பாட வகுப்பு நிறைவு

சிறப்புரை :-

அமுதமொழிக்கொண்டல், அருள்மொழி அரசு,

திருமுருக. கிருபானந்தவாரியார்

சென்னை.

மாலை 6-மணிக்கு

## புராணவிரிவுரை நிறைவு

அமுதமொழிக்கொண்டல், அருள்மொழி அரசு

**திருமுருக. கிருபானந்தவாரியார்**

சென்னை.

"வள்ளியம்மை திருஅவதாரம்"

9—6—66 வியாழக்கிழமை

**ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

## குருபூஜை விழா

காலை 10-மணிக்கு

## ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

விழா மலர்

## திருவாசகம்

மாலையில்

கனகாபிஷேகம் கொண்டருளிய

**ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள்**

காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளிக் குருமூர்த்த வழிபாடு செய்தருளல்.

பட்டணப்பிரவேசத் திருநாள் 10—6—66 வெள்ளிக்கிழமை

காலை 10 மணிக்கு

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

பகல் 12 மணிமுதல்

**மாகேஸ்வரபூஜை**

இரவு

பட்டணப்பிரவேசம்

